Registered at the G. P. O. asa Newspaper

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

National TAMIL DAILY

தேசிய தினசரி

போன் 389

தபாற் பெட்டி எண்: 49

மலர் 3 யாழ்ப்பாணம், பிலவ ஆடி 18 ஆம் நாள் ஸபர் 19 (2-8-61) புதன்கிழமை இதழ் 1.5

வாசனை உலகில் ஓர் பரபரப்பு!

இன்பம் தரும் 33 303 3003 பத்திகளை

உபயோகியுங்கள்.

தயாரிப்பாளர்கள்:

S. V. முருகேசன் அன் சன்ஸ்

சென்னை பெங்களூர்-2. மதுரை

# புதுவரிகளுக்கு எதிர்ப்பு

## வண. பீட்டர்பிள்ளை ஓய்வு பெறுவார்

கொழும்பு, செவ்வாய்

சென் ஜோஸப்ஸ் கல்லூரி அதிபர் வண. பீட்டர்பிள்ளை அடுத்தமாதம் பதவியிலிருந்து ஓய்வு பெறுவார். வண. பிரா டொன் பீட்டர், அவருக்குப் பதிலாக சென் ஜோஸப்ஸ் கல்லூரயின் 6 வது அதிபராகப் பதவி ஏற்பார். ஆயினும் பீட்டர் பிள்ளை, கல்வித்துறையிலிருந்து ஓய்வுபெறமாட்டார். அக்குவானஸ் சர்வகலாசாலைக் கல்லூரியின் பொறுப்பை வண. பீட்டர்பிள்ளை மேற்கொள்வார்.

## கல்லோயாவுக்கு 10 லட்சம் ரூபாய் ஆர்டர்

கொழும்பு, செவ்வாய்

10 லட்சம் ரூபாய் பெறுமதியான மீன்பிடிப் படகுகளை சப்ளை செய்யும்படி, கல்லோயா நச்சுத் தொழிற்சாலைக்கு மீன்பிடி இலாகா ஆர்டர் கொடுத்துள்ளது.

## புதிய சாருபடிக்கு விதி விலக்கு

கொழும்பு, செவ.

புதிதாகப் பயிரிடப்படும் அல்லது புனர் நடுகை செய்யப்படும் தேயிலை, ரப்பர், தேங்காய், கொக்கோ, கறுவா காணிகளுக்குப் புதிய நிலவரியிலிருந்து விலக்களிக்கப்படும். நேற்றிரவு நிதிமந்திரி வெளியிட்ட கெஸட் அறிக்கை இத்தகவலைத் தெரிவிக்கிறது.

## தபால், ரயில்வே அதிகாரிகள் சங்கத் தீர்மானம்

### உடன் தீவிர கிளர்ச்சி நடத்த யோசனை

கொழும்பு, செவ்வாய்

**மாதம் ஒன்றுக்கு 800 ரூபாய்க்குக் குறைந்த சம்பளம் பெறும் அரசாங்க ஊழியர்களுக்கு தேசிய அபிவிருத்திவரியிலிருந்தும், பங்கீட்டரிசிப் புத்தகவரியிலிருந்தும் விலக்களிக்கப்படவேண்டும் என இரு தொழிற்சங்கங்கள் அரசாங்கத்துக்கு விண்ணப்பித்துள்ளன.**

இலங்கை போஸ்ட் மாஸ்டர்கள் யூனியனும் ரெயில்வே சீனியர் குமாஸ்தாக்கள் யூனியனும், மாதமொன்றுக்கு ரூ. 800க்குக் குறைவாகச் சம்பளம் பெறும் அரசாங்க ஊழியர்களுக்கு புதிய 4 சத வீத அபிவிருத்தி வரியிலிருந்தும் பங்கீட்டரிசிப் புத்தக வரியிலிருந்தும் விலக்கு அளிக்கப்பட வேண்டுமென்று அரசாங்கத்திடம் கேட்டுள்ளன.

சென்ற ஞாயிற்றுக்கிழமை போஸ்ட் மாஸ்டர்கள் யூனியன் இத்தீர்மானத்தை நிறைவேற்றியது. இந்த யூனியன் அங்கம் வகிக்கும் அரசாங்க சேவை ஊழியர் தொழிற் சங்க சம்மேளனம் நடத்திய கூட்டத்தில் தொழிற் சங்க ரீதியாகவும் மற்றைய இயக்கங்கள் மூலமாகவும் வீட்டுப் பெண்கள் மூலமாகவும் இது குறித்து விரைவான ஒரு கிளர்ச்சி நடத்த வேணடுமென்று தீர்மானிக்கப்பட்டது. இவ்வித வரிவிலக்கு அளிக்காவிட்டால் தமது சம்பளத்தில் 20 வீதமான சம்பள உயர்வு தரப்பட வேண்டுமென்று போஸ்ட்மாஸ்டர்கள் தெரிவித்துள்ளார்கள்.

(7-ம் பக்கம் பார்க்க)

## ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி திருத்தியமைக்கப்படும்

### ஆகஸ்ட் 26-ம் திகதி வருடாந்த மகாநாடு

கொழும்பு, செவ்வாய்

பிரதமர் ஸ்ரீமதி பண்டாரநாயக்கா ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியைத் திருத்தியமைக்கவிருக்கிறார். அதன் வாலிபர் பகுதி, தொழிற்சங்கங்களும் பலப்படுத்தப்படும். மாதர் பகுதியொன்றும் கட்சியில் நிறுவப்படும்.

சென்றவாரம் இது பற்றி கட்சியினருடனும், கட்சி பார்லிமெண்ட் அங்கத்தினர்களுடனும் பிரதமர் சம்பாஷித்தார். கட்சிக்குச்செல்வாக்குள்ள தொகுதிகளில் மட்டுமின்றி, எதிர்க்கட்சியின் செல்வாக்குக்கு உட்பட்ட தொகுதிகளிலும் கட்சிக் கிளைகளை அதிகமாகத் திறக்கவேண்டிய தன் அவசியத்தைப் பிரதமர் அப்போது வற்புறுத்தினர். அங்கத்தினர்களிடமிருந்து கட்சிக்கு நிதி உதவுமாறு விண்ணப்பிக்கப்படும்.

தற்போது மந்திரிகள் மாதம் 100 ரூபாயும், எம். பி.க்கள் 25 ரூபாயும் சந்தாவாகக் கட்சிக்குச் செலுத்துகிறார்கள். இதற்கிடையில் ஆகஸ்ட் 26, 27 ம் தேதிகளில் பிரதமர் தலைமையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வருடாந்த மகாநாடு நடைபெறவிருக்கிறது.

## ஜப்பானிய டெலிபோன் சேவை

### ஆராய்வதற்கு இந்திய கோஷ்டி

கல்கத்தா, ஆக 1

ஜப்பானிய டெலிபோன் சேவை முறையை ஆராய்ந்து அறிந்துவருவதற்காக இந்திய டெலிபோன் நிபுணர் கோஷ்டியொன்று இன்று கல்கத்தாவிலிருந்து டோக்கியோவுக்குப் புறப்பட்டுச்சென்றது.

## தேயிலைப் பயிர்ச் செய்கை

### 10 வருடங்களில் குறையலாம்

கொழும்பு, செவ்வாய்

10 வருடங்களில், தேயிலைப் பயிர்ச் செய்கையில் எவ்வளவு குறைவு ஏற்படுமோ என ஒருவரும் திட்டவட்டமாகக் கூற முடியாது' என தேயிலை ஆராய்ச்சி நிலைய டைரக்டர் திரு. டி. எல். குன் 1960 ம் ஆண்டுக்கான அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## 4-ம் டெஸ்டில் ஆஸ்திரேலியா வென்றது!

லண்டன் ஆகஸ்ட் 1

இங்கிலாந்துக்கும் ஆஸ்திரேலியாவுக்குமிடையே மான்செஸ்டரில் நடைபெற்ற 4வது கிரிக்கெட் டெஸ்ட் போட்டியில் ஆஸ்திரேலியா 54 ரன்களால் வெற்றி பெற்றது.

இங்கிலாந்து அதன் முதலாவது இன்னிங்ஸில் 367 ரன்களும் இரண்டாவது இன்னிங்ஸில் 201 ரன்களும் எடுத்தது.

ஆஸ்திரேலியா தன் முதலாவது இன்னிங்ஸில் 190 ரன்களும், இரண்டாவது இன்னிங்ஸில் 432 ரன்களும் எடுத்தது.

இதுவரை நடைபெற்ற 4 டெஸ்டுகளில் ஆஸ்திரேலியா 2 டெஸ்டுகளிலும் இங்கிலாந்து 1 டெஸ்டிலும் வெற்றிபெற்றது. மற்றோர் டெஸ்ட் வெற்றி தோல்வியின்றி முடிந்தது.

### பிரிட்டனும் ஐரோப்பிய பொதுச் சந்தையும்

## சாம்ராஜ்யபிரதமர்கள் மகாநாடு நடைபெற வேண்டும்

—கனடா பிரதமர்

### மாக்மில்லன் அறிக்கையில் புதுடில்லி திருப்தி

புதுடில்லி, ஆகஸ்ட் 1

**ஐரோப்பிய பொதுமார்க்கெட்டில் பிரிட்டன் சேர்வது சம்பந்தமாய் பிரதமர் மாக்மில்லன் விடுத்த அறிக்கை பற்றி புதுடில்லி வட்டாரங்கள் திருப்தி தெரிவித்தன. அவரது அறிக்கை பாரதத்தின் கருத்துக்கேற்ப இருப்பதாயும் கூறப்பட்டது.**

பிரிட்டன் பொதுச்சந்தையில் சேர்ந்தால் சாம்ராஜ்யத்தின் பொருளாதார விளைவுகள் மோசமாய் இருக்குமென நியூஸிலாந்து பிரதமர் கூறியிருக்கிறார்.

பிரிட்டன் பொதுச்சந்தையில் சேர்வதற்குமுன் சாம்ராஜ்ய பிரதமர்கள் மகாநாடு கூடி, இதுபற்றி ஆராயவேண்டுமென கனடா பிரதமர் திரு. டீபன்பேக்கர் யோசனை தெரிவித்தார்.

அமெரிக்காவின் நிர்ப்பந்தம் காரணமாகவே பிரிட்டன் இதில் சேரப்போகிறதென்றும் சாம்ராஜ்யத்தைப் பலவீனப்படுத்துவதே அமெரிக்காவின் நோக்கம் என்றும் ரஷ்ய செய்தி ஸ்தாபனம் கூறியது.

## காங்கோ புதிய பிரதமர்

லியப்போல்ட்வில்லி, ஆகஸ்ட் 1

காங்கோவின் புதிய மந்திரி சபையைஏற்படுத்துமாறு ஜனாதிபதி கஸவுபு, உள்நாட்டுமந்திரியாய் இருந்த திரு. அடால்டாவைக் கேட்டிருக்கிறார் என அறிவிக்கப்பட்டது. இதுவரை பிரதமாரக இருந்த திரு. ஜோஸப் இலியோ ராஜினமாச் செய்து விட்டார்.

## ஸ்தலஸ்தாபன திருத்த மசோதா மீது மேயர் கண்டனம்

### மந்திரியின் போக்குபற்றி அதிருப்தி

கொழும்பு, செவ்.

சிம்மாசனப் பிரசங்கத்தில் தெரிவிக்கப்பட்டதற்கு மாறாக ஸ்தலஸ்தாபன மந்திரி நடந்து கொள்வதாய் கொழும்பு மேயர் ஜனப் முகம்மது புகார்கூறினர். ஸ்தலஸ்தாபனங்களுக்கு அதிக அதிகாரம் வழங்கபபடும் என சிம்மாசனப் பிரசங்கத்தில் கூறப்பட்டது என்றும் அவர் சுட்டிக்காட்டினர்.

(5ம் பக்கம் பார்க்க)

## கூட்டுறவு சங்கங்களுக்கு போதுமான அளவு கருவாடு வழங்கப்பட்டுள்ளதாய் கமிஷனர் தகவல்

கொழும்பு, செவ்வாய்

நாட்டிலுள்ள 4000 கூட்டுறவுச் சங்கங்களுக்கு போதுமான அளவு கருவாடுகள் வழங்கப்பட்டுள்ளன. நாட்டின் பல்வேறுபகுதிகளிலுமுள்ள 110 மத்திய யூனியன்கள் மூலம் இவை வழங்கப்பட்டன. கூட்டுறவு அபிவிருத்திக் கமிஷனர், இத் தகவலைத் தெரிவித்தார்.




# கதிர்காமத்தில் பக்தகோடி பௌத்தர்கள் காவடி எடுத்தனர்

பதுளை, ஞாயிறு

கதிர்காமத்துக்கு இம்முறை பக்தர்கள் திரண்டு சென்றிருந்தபடியால் அங்கு தங்குவதே மிகச்சிரமமாக இருந்தது. முருகன் சன்னிதியில் ஒருநாள் தாங்கமுடியாத கூட்டம். எட்டுமாதக் குழந்தையுடன் நின்ற தாயார் நசுக்கப்பட்ட காரணத்தால் கையிலிருந்த குழந்தை மூச்சுத் திணறி இறந்ததாக கூறப்படுகிறது.

இராமகிருஷ்ன மடத்தின் சேவையைப் பாராட்டாதவர்களே சிலர். மடத்திலுள்ள சுவாமிஜிக்களை வரையும் அன்புடன் வரவேற்று உணவளித்தார்.

பெரிய கோவிலுக்கு இம்முறை கூட்டம் கூட்டமாக ஒருவரும் செல்ல முடியாத வகையில் வாசற் கதவருகில் பொலிஸ் காவல் இடப்பட்டிருந்தது.

அர்ச்சனைக்காகத் தேங்காயுடன் ஒரு ரூபாய் காணிக்கையும் கொடுக்கவேண்டியிருந்தது.

காவடி எடுப்பதிற் சிங்களவர் மிகுந்த ஆர்வம் காட்டினர். காவடி ஆட்டத்தில் சிங்களவர் தமிழரையே விஞ்சிவிட்டனர்! பறவைக் காவடி, பாற் காவடி, செடில் காவடி என்பன தமிழர்களால் எடுக்கப்பட்டன.

200 பேரடங்கிய பொலிஸ் கோஷ்டியொன்று யாத்திரிகர்களுக்கு பலவகையிலும் உதவி புரிந்தது.

கள்வர்களின் நடமாட்டமும் இருந்தது. அநேகர் நகைகளையும் பணத்தையும் பறிகொடுத்தனர்.

சுகாதார ஒழுங்குகள் நல்ல முறையில் அமைந்திருந்தன. குடிதண்ணீர் வசதியும் குறிப்பிடத் தக்கது.

அதிக தொகையான சிங்களவர் இம்முறை விழாவிற் கலந்து கொண்டனர்.

செல்வக் கதிர்காமம் போகும் வழியிலேயே பிச்சைக்காரர் காணப்பட்டனர்.

## அரசாங்கமும் செயற்கை உரமும்

கொழும்பு, செவ்வாய்

செயற்கை உரத்தை அரசாங்கமே அதிகமாக வாங்குவதாலும், விவசாயத்தை வளப்படுத்துவதற்கு, உரக்கலவையிற் சிறந்த ரகம் தேவைப்படுவதாலுமே அரசாங்கம், செயற்கை உரவியாபாரத்திலீடுபட்டிருக்கின்றதென இவ்வியாபாரத்தில் அரசாங்கம் சேர்ந்த காரணத்தை உணவு வர்த்தக கப்பல் அமைச்சு விளக்கிற்று.

உணவு வர்த்தக கப்பல் அமைச்சர் இதற்கென ஓர் அதிகாரியையும் பிரத்தியேக இலாகா ஒன்றையும் ஏற்கென நியமித்திருக்கிறார். வேலை ஆரம்பத்தில் வேண்டிய பணத்துக்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இப்போது, அரசாங்க இலாகாக்களுக்கு மட்டும் 8 கோடி ரூபாய் செலவில் 70 ஆயிரம் தொன் செயற்கை உரம் தேவைப்படுகிறது.

கீழ்க்காணும் இலாக்காக்களுக்கு அரசாங்கம் செயற்கை உரம் விநியோகஞ் செய்யும். தேயிலை ஆராய்ச்சிக் கூடம், ரப்பர் ஆராய்ச்சிக் கூடம், தெங்குப் புனருத்தாரண இலாகா, விவசாய சேவை இலாகா, விவசாய இலாகா.

1957-ம் ஆண்டில் மாத்திரம் 5 கோடி 43 லட்சத்து 35 ஆயிரத்து 786 ரூபாய் செலவில் 43 லட்சத்து 23 ஆயிரத்து 827 தொன் வெவ்வேறு ரக செயற்கை உரம் இறக்குமதி செய்யப்பட்டது.

# கிராமவாசிகளுக்கு பஸ் பிரயாண வசதி

கொழும்பு, செவ்வாய்

கிராமவாசிகளுக்குச் சிறந்த போக்குவரத்து வசதிகளை அளிப்பதற்காக இலங்கைப் போக்கு வரத்து சபை மராமத்து இலாகாவின் துணைகொண்டு கிராமத்தெருக்களைப் பார்வையிடும்.

கிளை ஸ்தாபனங்களின் சேவைகள் மூலம் கிராமங்களை அருகில் உள்ள பட்டினங்களுடன் இணைப்பதற்கே இ. போ. ச. இவ்வழியைக் கையாளுகின்றது. கிராமத்துத் தெருக்களை நன்கு பேணவும் பஸ் போக்குவரத்தை உகந்த முறையில் அமைப்பதற்கும் மராமத்து இலாகா உதவி செய்யும்.

மத்திய மாகாணப் பகுதியில் சேரவிருக்கும் தெருக்களைப் பற்றி கண்டி விவசாயக் கமிஷனிடம் இருந்து ஆலோசனை கோரப்படும். இப்பகுதிகளுக்குச் சிறிய பஸ்கள் உபயோகிக்கப்படும்.

## உப்பு இலாகா நிர்வாகம் பரிசீலனை செய்ய கமிஷன்

கொழும்பு, செவ்வாய்

உப்பு இலாகாவின் வேலைகளைப் பரிசீலனை செய்வதற்காக விரைவில் கமிஷன் ஒன்றைக் கைத்தொழில், உள்நாட்டு, கலாச்சார விவகார மந்திரி நியமிப்பார்.

ஓய்வுபெற்ற சிவில் சேவையாளர் தலைமை வகிக்க இருக்கும் இக்கமிஷன், 1955-ம் ஆண்டு தொடக்கம், உப்பு இலாகா செய்த சேவைகளை ஆராயும்.

விரைவில் உப்புத் தட்டுப்பாடு ஏற்படும் என அஞ்சப்படுவதால் அரசாங்கம் உப்பு இறக்குமதி செய்ய இருப்பதாக விடுத்த அறிக்கையைத் தொடர்ந்தே இந்நடவடிக்கை எடுக்கப்பட்டது.

சில காலத்துக்கு முன்னர் அக்குறஸ்ஸ எம். பி. டாக்டர் எஸ். ஏ விக்கிரமசிங்க உப்பு இலாகா நிர்வாகத்தை வன்மையாகக் கண்டித்து ஜனப் பிரதிநிதிகள் சபையில் பேசியதை அடுத்து திரு. பி. ஆர் தேவராஜன் என்... கமிஷனராகத் தெரிவு செய்யப்பட்டார்.

## ஐ. நா. வில் அல்ஜீரிய ஆசிய—ஆபிரிக்க குழு கோரிக்கை

நியுயோர்க், ஆக. 1

செப்டம்பர் மாதத்தில் ஐ. நா. மகாசபையின் முறையான கூட்டம் ஆரம்பமானதும் ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்படவிருக்கும் விஷய அட்டவணையில் அல்ஜீரியப் பிரச்சினையையும் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று ஐ. நா. விலுள்ள ஆசிய—ஆபிரிக்க குழு கோரியுள்ளது.

## கட்டாய ஆரம்ப கல்வித் திட்டம் மைசூரில் அமுல்

பங்களூர், ஆக. 1

மைசூர் ராஜ்யத்தில் இன்று தொடக்கம் கட்டாய ஆரம்பக் கல்வித்திட்டம் அமுலுக்கு வந்துள்ளது. இதற்காக கிராமப் புறங்களில் பல புதிய பாடசாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. 4500 ஆசிரியர்களுக்கு அதிகமாக புதிய ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

## கொச்சியில் விமான விபத்து

திருவானந்தபுரம், ஆக. 1

இந்தியன் எயர்லைன்சைச் சேர்ந்த டகோட்டா விமானமொன்று நேற்று கொச்சி விமான நிலையத்தில் தரையிறங்கியபோது விபத்துக்குள்ளானது. விமானம் சேதமடைந்தாயினும் விமானத்திலிருந்த பத்து பிரயாணிகளும் காயமின்றித் தப்பினர்.

## மடுமாதா திருநாள் தற்காலிக தபாற்கந்தோர்

கொழும்பு, செவ்வாய்

மடுமாதா திருநாளை முன்னிட்டு இம்மாதம் 7-ந் திகதியிலிருந்து 17-ந் துகதி வரை மடுக்கோவிலில் தற்காலிக தபாற்கந்தோர் ஒன்று திறக்கப்படும்.

மடுத்திருநாளின் போது அங்குள்ள உப தபாற்கந்தோர் மூடப்பட்டிருக்கும். இத் தபாற்கந்தோர் ஆகஸ்ட் மாதம் 18-ந் திகதி மீண்டும் திறக்கப்படும்.

தற்காலிகமாகத் திறக்கப்படும் தபாற்கந்தோரில் சகல விதமான தந்திப்போக்கு வரத்துக்களும் நடைபெறும். முதல் தர உப தபாற்கந்தோர் போல் இது பணியாற்றும்.

# டாக்டர்களை அமர்த்துவதற்கு அப்போதிக்கரிமார் ஆட்சேபம்

ஆஸ்பத்திரிகளில் டாக்டர்கள் போதாக்குறையைத் தீர்ப்பதற்குத் தாம் உதவுவதாக அரசாங்க அப்போதிக்கரிகள் அரசினருக்குத் தெரிவித்தார்கள். எனினும் இளைப் பாறிய டாக்டர்களை ஆஸ்பத்திரியில் பணியாற்ற அமர்த்துவதென அரசாங்கம் திட்டமிடுகின்றன. அரசாங்கத்தின் இந்த யோசனைக்குத் தமது எதிர்ப்பை அரசாங்க அப்போதிக்கரிகள் சங்கம் சென்ற ஞாயிற்றுக் கிழமை கூட்டிய விசேஷ பொதுக் கூட்டமொன்றில் தெரிவித்துள்ளது. சங்கத்தின் செயலாளர் திரு. ஏ. ஜோர்ஜ் பேசியதாவது:-

எமது சங்கம் டாக்டர்கள் போதாக்குறையைத் தீர்ப்பதற்கு மிகவும் திட்டமொன்றைத் தயாரித்தது. ஆனால் அரசாங்கம் அதை ஏற்றுக் கொள்ளத் தவறிவிட்டது. அப்போதிக்கரிகளுக்கு மேலதிகமான பயிற்சி அளிக்கப்படல் வேண்டும். சாதாரண சிகிச்சையிலும் சத்திர சிகிச்சையிலும் பரீட்சைகள் நடாத்தி அவற்றின் மூலம் அப்போதிக்கரிகள் விசேஷ பயிற்சிக்குத் தேர்ந்தெடுக்கப்படல் வேண்டும். இவ்விதமாக அப்போதிக்கரிகள் பயிற்றப்பட்டால் அரசாங்க டாக்டர்கள் பற்றாக்குறையைச் சமாளிக்க முடியும். அரசாங்க சேவைத் தொழிலாளர் தொழிற்சங்க சம்மேளனத்தின் அங்கத்துவத்திலிருந்து தாம் விலகிக்கொள்வதென்றும் அதற்குப்பதிலாகத் தொழிலாளர் சங்கத் தாபனத்தின் கூட்டுக் கமிட்டியில் சேர்ந்து கொள்வதென்றும் அப்போதிக்கரி சங்கம் ஏகமனதாக தீர்மானித்தது.

அரசாங்கசேவை தொழிலாளர் தொழிற்சங்க சம்மேளனம் தமதுசங்கம் எதிர்பார்த்த எதையும் செய்யவில்லை என திரு. ஜோர்ஜ் கூறினர்.

## சரவணை சின்ன மடுமாதா திருநாள்

ஊர்காவற்றுறை, திங்கள்

சரவணை 'சின்னமடுமாதா' திருநாள் சென்ற வியாழக்கிழமை ஆரம்பிக்கப்பட்டு சிறப்பாக நடைபெற்று வருகின்றன. ஆகஸ்டு மாதம் ஐந்தாம் திகதி நடைபெறும். மாதாதிருவுருவ சுற்றுப்பிரகாரத்துடன் திருநாட்கள் முடிவடையும்.

# மனைவியின் மரணத்தினல் மனமுடைந்தவர் மதுவைநாடினர் முடிவில் மரணத்தை தேடினர்

யாழ்ப்பாணம், புதன்

மனைவியின் மரணத்தின்பின் மனமுடைந்திருந்த செல்லப்பா சின்னையா என்பவர் கழுத்தில் சுருக்கிட்டுத் தற்கொலை செய்துகொண்டார்.

ஆனைக்கோட்டையைச் சேர்ந்த செல்லப்பா சின்னையா கல்லுண்டாய் வழியிலுள்ள இரட்டைப்பனையடி என்னுமிடத்தில் தாளமரம்ஒன்றில் சுருக்கிட்டுத் தொங்கி மரணமடைந்தது சம்பந்தமாக திடீர்மரண விசாரணை அதிகாரி எஸ். கனகரத்தினம் மரணவிசாரணை நடத்தினர்.

காலஞ்சென்றவரின் மகன் சின்னையா ஆறுமுகம் சாட்சியமளிக்கையில் தனது தாயார் ஒன்றரை வருடங்களுக்குமுன் காலமானதாகவும், அன்றிலிருந்து மனமுடைந்த நிலையிலிருந்த தனது தந்தையார் குடிப்பழக்கத்தை மேற்கொண்டதுடன் உணவைப்பற்றிக் கவலைப்படாமல் திரிந்தாரென்றும் கூறினர். மதுவருந்துவதற்காக அவரது சகோதரர் அவரை ஒருவாரத்துக்குமுன் ஏசியதாகவும் இதனல் மேலும் மனவேதனையடைந்த தனது தந்தையார் வீட்டுக்கு வராமலிருந்தாரென்றும் சென்ற சனிக்கிழமையும் ஞாயிற்றுக்கிழமையும் அவரைத் தேடித்திரிந்த பொழுது அவர் ஒரு தாளை மரத்தில் தொங்கிக்கொண்டிருக்கக் காணப்பட்டாரென்றும் ஆறுமுகம் கூறினர்.

பிரேத பரிசோதனைநடத்திய பதில் சட்டவைத்திய அதிகாரி டாக்டர் ஏ. அருமைநாயகம் சாட்சியமளித்தபின் தற்கொலை என மரணவிசாரணை அதிகாரி தீர்ப்பளித்தார்.

## தாக்கியவருக்கு அபராதம்

பருத்துத்துறை, ஞாயிறு

கெருடாவிலைச்சேர்ந்த செல்லப்பா இராசேந்திரம் என்பவர், சின்னத்தம்பிஐயர் மகன் கணபதிப்பிள்ளை ஐயரை தடியாலடித்து காயம் விளைவித்ததாகக் குற்றம்சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் பருத்தித்துறை நீதிபதி எதிரிக்கு 75 ரூபாய் அபராதம்விதித்தார்

## உங்கள் நோய்

குணப்படுத்த உத்தரவாதம். நீரிழிவுக்கு 15 நாள் மருந்து ரூ. 15-50. தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 12-50. பல வியாதிகளுக்கும் நற்சாட்சிப் பத்திரங்கடங்கிய கற்றலோக் (Catalogue) இனம்.

**வைத்தியர் பரிபூரணனந்தர்**
கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.




## இளம் கலைஞர் இயக்கம்

பண்டத்தரிப்பு, திங்கள்

ஈழத்து இளம் கலைஞர் இயக்க ஆதரவில் சென்ற ஞாயிற்றுகிழமை டாக்டர் அ. வை. தங்கக்கணபதி தலைமையில் ஓர் பொதுக் கூட்டம் நடைபெற்றது. 'அமுதம்' ஆசிரியர் திரு. மா. பி. தமிழ்நெஞ்சன் பேசும்போது ஈழத்து இளம் கலைஞர் இயக்கம் இலங்கையிலே இதுவரை ஏற்படுத்தாத ஒரு புது முயற்சி எனவும் தூங்கிக்கிடக்கும் இலக்கிய உலகிற்கு விழிப்புணர்ச்சியூட்டும் இதுபோன்ற இயக்கங்கள் இலங்கை யெங்கணும் பெருகவேண்டும். என்றும் கேட்டுக்கொண்டார்.

விரைவில் முத்தமிழ் விழா ஒன்று நடத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

## எல்லைப் பேச்சு

காட்மாண்டு, ஆக. 1

சீன — நேபாளம் எல்லை சம்பந்தமாக நவசீன அதிகாரிக்கும் நேபாள அரசாங்க அதிகாரிகளுக்குமிடையில் நடைபெற்றுவரும் பேச்சுவார்த்தைகளின் இறுதிப் பேச்சுவார்த்தை இன்று காட்மாண்டுவில் ஆரம்பமானது.

# பிஸர்ட்டா நெருக்கடி — ஐ. நா. சபை வியாழக்கிழமை கூடும்?

## ஆசிய- ஆபிரிக்க நாடுகளின் முயற்சி

நியுயோர்க், ஆக. 1

பிஸர்ட்டா நிலைமை பற்றி விவாதிக்க ஐ. நா. பொதுச் சபை அவசரமாகக்கூட வேண்டும் என்று ஐ. நா. விலுள்ள ஆசிய ஆபிரிக்க குழு கோரியுள்ளது. இக்கோரிக்கைக்கு 50 அங்கத்துவ நாடுகளின் ஆதரவு கிடைத்தால் ஐ. நா. பொதுச்சபையின் அவசரக் கூட்டம் வியாழக்கிழமை நடைபெறுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

பிஸர்ட்டா நிலைமை குறித்து பிரான்ஸ் மீது டூனிஷியா செய்துள்ள புகாரை ஐ. நா. பொதுச் சபை விவாதிக்க வேண்டுமென்று கோருவதென ஐ. நா. விலுள்ள ஆசிய ஆபிரிக்க குழு தீர்மானித்துள்ளது.

பிஸர்ட்டாவில் பிரான்ஸ் மேலும் மேலும் துருப்புக்களைக் கொண்டுவந்து குவிப்பதாகவும் பிஸர்ட்டாவை பிரான்ஸ் ஆக்கிரமித்துக் கொண்டிருப்பதாகவும் பாதுகாப்புச் சபையின் தீர்மானத்துக்கிணங்க பிரஞ்சுப் படைகள் பழைய நிலைகளுக்குத் திரும்பிச் செல்லவில்லையென்றும், சண்டை நிறுத்த உத்தரவுக்கு பிரான்ஸ் முரணாக நடந்து கொள்வதாகவும் டூனிஷியா தெரிவித்துள்ளது.

பிஸர்ட்டாவில் டூனிஷியத் துருப்புக்களுக்கும், பிரான்ஸ் துருப்புகளுககுமிடையில் கைகலப்பு ஏற்பட்டதும் பாதுகாப்புச் சபை அவசரமாகக் கூடி, பிஸர்ட்டாவில் இருதரப்பினரும் உடனடியாக சண்டையை நிறுத்திக்கொள்ள வேண்டுமென்றும் சண்டைக்கு முன்னர் இருந்த பழைய நிலைகளுக்கு இருதரப்பு படைகளும் திரும்பிச் செல்ல வேண்டுமென்றும் ஒரு தீர்மானத்தின் மூலம் பிரான்சையும் டூனிஷியாவையும் கேட்டுக் கொண்டது.

பாதுகாப்புச் சபை கேட்டுக் கொண்டதற்கிணங்க பிஸர்ட்டாவில் சண்டை நிறுத்தப்பட்டது. ஆனல் பிஸர்ட்டா நகரில் பெரும் பகுதியைப் பிடித்துக் கொண்ட பிரஞ்சுத் துருப்புக்கள் அங்கிருந்து பழைய இடங்களுக்குத் திரும்பிச் செல்லவில்லை. சகாராவில் முகாமிட்ட டூனிஷியத் துருப்புக்களும் தங்கள் பழைய இடத்துக்குத் திரும்பவில்லை.

பிஸர்ட்டாவில் நிலவிய அபாயகரமான நிலைமைகாரணமாக பெருந்தொகையான மக்கள் பிஸர்ட்டா நகரிலிருந்து வெளியேறி கிராமப் பகுதிகளில் குடியேறியுள்ளனர்.

### பாதுகாப்புச் சபை முடிவு காணவில்லை

பிஸர்ட்டா நெருக்கடிக்கு ஒரு தீர்வு காணுமுகமாக சென்றவாரம் ஐ. நா. பாதுகாப்புச்சபை மீண்டும் கூடியது. லைபீரியா, ஐக்கிய அரபுக் குடியரசு, இலங்கை ஆகிய நாடுகள் கூட்டாகவும் துருக்கி தனியாகவும் மூன்று தீர்மானங்கள் கொண்டுவந்தன. மூன்று தீர்மானங்களும் பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் தோல்வியடைந்தன.

பிஸர்ட்டா நெருக்கடிக்கு பாதுகாப்புச்சபை எவ்வித முடிவும் காணமுடியாதுபோனதால் ஐ. நா. பொதுச்சபையின் அவசரக் கூட்டத்தை கூட்டி விவாதிக்க வேண்டுமென்று ஆசிய ஆபிரிக்க குழு தீர்மானித்துள்ளது.

பொதுச் சபையின் அங்கத்தவர்களில் 50 அங்கத்தவர்களின் ஆதரவைப் பெற்றல் ஐ. நா. பொதுச் சபை பிஸர்ட்டா நிலைமை பற்றி ஒரு முடிவு காண முடியும்.

### நைஜீரியப் பிரதமர் கண்டனம்

இப்பொழுது நியூயோர்க்கிலுள்ள நைஜீரியப் பிரதமர் திரு. அபூபக்கர் பிஸர்ட்டா நிலைமை பற்றி அபிப்பிராயம் தெரிவிக்கையில் பிரான்ஸ் போன்ற பெரிய வல்லரசு ஒன்று சிறிய நாடான டூனிஷியா மீது தாக்குதல் நடத்துவது வெட்கக்கேடு என்று குறிப்பிட்டார்.

---

## நிலக்கரி பற்றுக்குறை

### சிமெந்து உற்பத்தி நிறுத்தப்பட்டது

கர்னூல், ஆக 1

ஆந்திர ராஜ்யத்தில் மார்ச்சரில்லா சிமெந்து தொழிற்சாலை தற்காலிகமாக மூட வேண்டி நேர்ந்ததற்கு நிலக்கரி பற்றுக்குறைதான் காரணம் என்று ஆந்திர கைத்தொழில் மந்திரி தெரிவித்தார்.

நிலக்கரி பற்றுக்குறை நீங்கி விடுமென்றும், விரைவில் சிமெந்துதொழிற்சாலை முழுஅளவில் சிமெந்துஉற்பத்திசெய்ய ஆரம்பிக்குமென்றும் அவர் கூறினர். நாகார்ஜிதனசாகர் அணைக்கட்டுத்திட்டத்துக்கு மார்ச்சரில்லா சிமெந்துதான் உபயோகிக்கப்படுகிறது.

---

## கென்னடி-சாங்சங் பேச்சுவார்த்தை

வாஷிங்டன், ஆக 1

தேசிய சீன உபஜனதிபதி சாங்சங் நேற்று வாஷிங்டன் வந்துசேர்ந்தார். சீன வெளிவிவகார மந்திரியுடன் வந்து சேர்ந்த உபஜனதிபதியை அமெரிக்க உபஜனதிபதி லிண்டன்ஜோன்சனும் ராஜாங்க காரியதரிசி திரு. டீன்றஸ்க்கும் விமானநிலையத்தில் வரவேற்றனர்.

இதன்பின் அமெரிக்க ஜனதிபதி திரு. கென்னடியை திரு. சாங்சங் வெள்ளைமாளிகையில் சந்தித்து ஒன்றரை மணிநேரம் பேச்சுவார்த்தை நடத்தினர்.

## கௌஹாட்டி துப்பாக்கிப் பிரயோகம்

### நியாயமானதென கமிஷன் தீர்ப்பு

ஷில்லாங், ஆக. 1

சென்றவருஷம் கௌஹாட்டியில் பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தது சம்பந்தமாக விசாரணைநடத்த நியமிக்கப்பட்ட விசாரணைக் கமிஷன், பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தது நியாயமானது என்று தெரிவித்துள்ளது.

கௌஹாட்டி கலகத்தில் பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் ஒரு மாணவன் மாண்டான். ஏழு பேர் காயமடைந்தனர்.

மொழிப்பிரச்சினை தான் இக்கலகத்துக்கு காரணம் என்று விசாரணைக் கமிஷன் தெரிவித்துள்ளது.

கமிஷனின் தீர்ப்பை அஸ்ஸாம் அரசாங்கம் ஏற்றுக் கொண்டது. கலகத்தின்போது கடமை தவறிய அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று கமிஷன் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதற்கிணங்க கடமை தவறிய அதிகாரிகள்மீது நடவடிக்கை எடுக்கப்படுமென அஸ்ஸாம் அரசாங்கம் அறிவித்துள்ளது.

---

## குடையைப் பறித்து அடித்தாராம்

### ரூ. 75 அபராதம்

பருத்தித்துறை, ஞாயிறு

நாகர்கோவில் உதவிக்கிராமவிதானை தில்லைநாதர் சந்திரசேகரம் என்பவரை அவரது குடையைப் பறித்து அடித்ததாக சடையர் வடிவேலு என்பவர்மீது குற்றம்சாட்டி பொலிசாரால் தொடரப்பட்ட வழக்கில், பருத்தித்துறை நீதவான் திரு. டி. டபிள்யூ. வத்துவகெட்டி எதிரிக்கு 75 ரூபாய் அபராதம் விதித்தார்.

பேர்லின் பிரச்னை

## குருஷேவுடன் பேசுவதற்கு ஹியூம்பிரபு நிபந்தனை

லண்டன், ஆக. 1

"பெர்லின் சம்பந்தமாக சோவியத் பிரதமர் குருஷ்சேவுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு பிரிட்டன் தயாராக இருக்கிறது. ஆனல் மேற்கு பெர்லினில் மேற்கு நாடுகளுக்குரிய உரிமைகள் முதலில் அங்கீகரிக்கப்படவேண்டும்" என்று பிரிட்டிஷ் வெளிவிவகார மந்திரி ஹியூம்பிரபு நேற்றிரவு தெரிவித்தார்.

"மேற்கு பெர்லின் மக்களின் சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்படவேண்டும்: மேற்கு பேர்லினில் மேற்குநாடுகளுக்குரிய உரிமைகளும் கடமைகளும் தொடர்ந்திருக்கவேண்டும்; மேற்கு பெர்லினுக்கு மேற்கு நாடுகள் தடையின்றிச் செல்லக்கூடியதாக இருக்கவேண்டும்" இந்த மூன்று அம்சங்களும் பேர்லின் பிரச்னைக்குத் தீர்வுகாண்பதற்கு அவசியமாகும் என்று ஹியூம்பிரபு கூறினர்.

பெர்லின் பிரச்னை சம்பந்தமாக எப்பொழுது? எந்தமுறையில் பேச்சுவார்த்தை நடத்துவதென்பது திரு. குருஷ்சேவிடம்தான் தங்கியுள்ளது என்று ஹியூம்பிரபு குறிப்பிட்டார்.

கிழக்கு ஜேர்மனியுடன் சோவியத் அரசாங்கம் தனியாக சமாதான ஒப்பந்தம் செய்துகொள்ளட்டும். ஆனல் அந்த ஒப்பந்தத்தினல் மேற்கு பெர்லினுக்கு மேற்கு நாடுகள் செல்வதற்கு முடியாமல் வழி அடைக்கப்படுவதையோ, மேற்கு பெர்லினில் மேற்குநாடுகளுக்குள்ள உரிமைகள் தடைபடுவதையோமேற்கு நாடுகள் ஒப்புக்கொள்ளமுடியாது என்று கூறிய ஹியூம்பிரபு மேற்கு பேர்லினுக்குத் தடையின்றிச் செல்வதற்காக கிழக்கு ஜேர்மனியுடன் மேற்கு நாடுகள் பேச்சுவார்த்தை நடத்தவேண்டுமென்பதையும் ஒப்புக்கொள்ளமுடியாது என்றார்.

பேர்லின் பிரச்னை சம்பந்தமாக யுத்தம் ஒன்று ஏற்படுவதை பிரிட்டன் விரும்பவில்லை. ஆனல் யுத்தம் ஏற்பட்டுவிட்டால் பிரிட்டன் நடுநிலைமை வகிக்காது என்றும் ஹியூம்பிரபு தெரிவித்தார்.

---

## தென்கிழக் காசிய சங்கம்

### மூன்று நாடுகள் அமைத்தன

மணிலா, ஆக. 1

தென்கிழக்காசிய நாடுகளுக்கிடையே நெருங்கிய பொருளாதார சமூக ஒத்துழைப்பை ஏற்படுத்தும் நோக்கமாக மலாயா, பிலிப்பைன்ஸ், தாய்லாந்து ஆகிய மூன்று நாடுகளும் நேற்று ஒருசங்கம் அமைத்தன.

'தென் கிழக்காசிய சங்கம்' என அழைக்கப்படும் இச்சங்கம் அமைக்கப்படுவதற்கான பேச்சுவார்த்தைகளில் மலாயா பிரதமர் துங்கு அப்துல் ரஹ்மானும் பிலிப்பைன்ஸ், தாய்லாந்து ஆகிய நாடுகளின் வெளிவிவகார மந்திரிகளும் கலந்து கொண்டனர்.

சங்கம் அமைக்கப்பட்டதும் இவர்கள் மூவரும் கைச்சாத்திட்ட ஒரு அறிக்கை வெளியிடப்பட்டது.

---

## உற்பத்தி அதிகரிப்பு

துர்க்காபூர், ஆக 1

துர்க்காபூர் எஃகு ஆலையின் இரண்டாவது ஊதுஉலையில் உற்பத்தி அதிகரித்திருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

## தேசிய வீடமைப்பு சுவீப் ஏற்படுத்த யோசனை

கொழும்பு, செவ்வாய்

ஸ்தல ஸ்தாபன சபைகள் வீடமைப்புத் திட்டத்துக்கு நிதி வசதி செய்து கொடுப்பதற்காக ஒரு தேசிய வீடமைப்பு சுவீப்பை ஆரம்பிக்குமாறு கொழும்பு மாநகரசபை மத்திய அரசாங்கத்தைக்கேட்டுள்ளது.

நகர வீடமைக்கும் குழுவும் நகர சீர்திருத்தக் குழுவும் சபையில் சமர்ப்பித்த அறிக்கையில், நிதி இல்லாத காரணத்தால் ஸ்தல ஸ்தாபன சபைகள் தமது வீடமைப்புத் திட்டத்தை அமுல் நடத்த முடியாமல் இருக்கிறது என்றும் 'தேசிய ஆஸ்பத்திரி சுவீப்' போன்ற ஒன்றை வீடமைப்புத் திட்டத்துக்கும் ஏற்படுத்தினல் ஸ்தல ஸ்தாபனங்கள் சுவீப் நிதியிலிருந்து பணம் கடனைப் பெறலாம் எனவும் கூறியுள்ளது.

---

## ஈவியன் மகாநாடு முறிந்ததேன்?

ஜெனிவா, ஆக. 1

அல்ஜீரியாவின் எதிர் காலம் சம்பந்தமாக அல்ஜீரிய தேசியவாதிகளுக்கும் பிரஞ்சு அதிகாரிகளுக்குமிடையில் ஈவியானில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் முறிந்ததற்குரிய காரணங்கள் என்னவென்பதை பேச்சுவார்த்தைகளில் கலந்து கொண்ட அல்ஜீரிய தேசியவாதிகளின் கோஷ்டிக்குத் தலைமை வகித்த திரு. பெல்காசிம் இங்கு நிருபர்களிடம் கூறினர்.

சகாரா விஷயத்தை ஆளப் போட்டுவிட்டு இதர விஷயங்களில் கவனம் செலுத்தவே பிரான்ஸ் பிடிவாதமாக விருந்ததென்று திரு. பெல்காசிம் தெரிவித்தார். சுதந்திர அல்ஜீரியாவை அல்ஜீரியர்களுக்கு அளிக்க மறுக்கும் அடிப்படையிலேயே பேச்சுவார்த்தை நடத்த பிரான்ஸ் தயாராக இருந்தது என்றும் பெல்காசிம் கூறினர்.

---

## யூகோ தூதர் ஆர். கே. நேரு சந்திப்பு

புதுடில்லி, ஆக. 1

புதுடில்லியிலுள்ள யூகோஸ்லேவிய ஸ்தானிகர் இந்திய வெளிவிவகார இலாகா பிரதம காரியதரிசி திரு. ஆர். கே. நேருவை நேற்று சந்தித்துப் பேசினர்.

பெல்கிறேடில் நடைபெறவிருக்கும் நடுநிலைமை நாடுகளின் தலைவர்கள் மகாநாடு சம்பந்தமாக இந்திய அரசாங்கம் யூகோஸ்லேவியாவிடம் சில விளக்கங்கள் கோரியிருந்ததாகவும் இது சம்பந்தமாகவே யூகோஸ்லேவிய ஸ்தானிகர் திரு. ஆர். கே. நேருவைச் சந்தித்துப் பேசியதாகவும் அறியப்படுகிறது.

---

## அகாலிடால் கமிட்டிக் கூட்டம்

அமிர்தசரஸ், ஆக 1

அகாலிடாலின் காரியக்கமிட்டி நேற்று அமிர்தசரசில் கூடி பஞ்சாப் ராஜ்யக் கோரிக்கைபற்றியும், மாஸ்டர் தாராசிங் உண்ணவிரதம் இருக்கப் போகும் திட்டம் பற்றியும் ஆராய்ந்தது. இன்றும் கமிட்டிக்கூட்டம் நடைபெறும்.

# வவுனியாவில் கல்வி அதிகாரி கந்தோர்

## விரைவில் நிறுவ ஆசிரிய சங்கம் கோரிக்கை

முள்ளியவளை, திங்கள்

வவுனியாவில் நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ள கல்வியதிகாரி காரியாலயத்தை மிகவிரைவில் திறக்க நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்ளும் தீர்மானமொன்று வவுனியாப் பகுதி நிரந்தரவாச அரசினர் ஆசிரியர் சங்கத்தின் செயற்குழுக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

சங்கத் தலைவர் திரு. நீ. அந்தோனிப்பிள்ளை தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது.

பரீட்சைமேற்பார்வையாளர், உதவியாளர்களை சங்கத்திலிருந்தும் தெரிவுசெய்யவேண்டுமென்றும்; வவுனியாப்பகுதிக்குள் நடைபெறும் ஆசிரியர் மாற்றங்கள், பதவி உயர்வுகள் எல்லாம், சங்கத்தின் ஆலோசனையுடன் நடைபெறவேண்டுமென்றும், சங்க உறுப்பினரிடையேயிருந்து, பாடசாலை பரிசோதகர்களைத் தெரிவுசெய்யவேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளும் தீர்மானங்களும் கூட்டத்தில் நிறைவேறின.

---

## "தண்டிக்க உரிமை உண்டு"

மாகோ, செவ்வாய்

"மாணவர்களைத் தண்டிப்பதற்கு ஆசிரியர்களுக்கு உரிமையிருக்கின்றது. பெற்றோர் எல்லோரும் ஆசிரியர்களுக்கு எதிராக நடவடிக்கைகளை எடுத்தால் கோர்ட்டுக்கு வேறு வேலையே இருக்கமாட்டாது."

இவ்வாறு, மாகோ சர்க்கியூட் நீதிபதி திரு. பி. செனரத்ன கிறில்ல மகாவித்தியாலத்தைச் சேர்ந்த மாணவன் ஒருவனின் தந்தையைக் குறித்துப் பேசுகையில் கூறினர்.

ஆசிரியர் திரு. டி. எம். திசநாயக்கா என்பவர் ஏ. எம். டிக்கிரி பண்டாவுக்கு கையினல் அடித்து சிறுகாயம் விளைவித்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டு இவ்வழக்கு பதிவு செய்யப்பட்டிருந்தது.

இவ்வழக்கில் குற்றவாளி விடுதலை செய்யப்பட்டார்.

### மணிவாக்கு

இலட்சியங்கள் எல்லாம் நட்சத்திரங்களைப்போல. அவைகளை நாம் என்றும் எட்டிப்பிடித்து விடுவதில்லை. ஆனால் கடலிலுள்ள மாலுமிகளைப் போல அவற்றின் ஒளியில் நம்முடைய வழியை வகுத்துக்கொள்கிறோம்.

—ஓர் அறிஞர்


# ஈழநாடு

EELA NADU

யாழ்ப்பாணம் பிலவ ஆண்டு
ஆடி மீ 18உ (2-8-61)

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone: 389.


## இலங்கை வங்கி

இலங்கை வங்கியை தேசியமயமாக்கப் போவதாக நிதிமந்திரி தமது வரவுசெலவுத் திட்டப் பிரசங்கத்தில் அறிவிப்பாரென்று அநேகமாக யாருமே எதிர்பார்க்கவில்லை. அமைச்சரின் இந்த அறிவிப்பு பலருக்கும் வியப்பை அளித்தது. என்றாலும் இலங்கை வங்கியை முற்றிலும் அரசாங்க உடமையாக்கும் யோசனைக்கு நாட்டில் எவ்வித எதிர்ப்போ ஆட்சேபமோ கிளம்பாதது குறிப்பிடத்தக்கது.

திரு. பெரிசுந்தரம் இலங்கையின் வர்த்தக அமைச்சராக இருந்த காலத்தில், இலங்கை வங்கிச் சட்டத்தை அரசாங்க சபையில் கொண்டுவந்து நிறைவேற்றினார். 1939-ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 1-ந் திகதி இலங்கை வங்கி ஆரம்பமாயிற்று. இதன் மூலதனத்தில் பாதியை அரசாங்கம் போட்டு இந்த வங்கிக்கு ஆதரவளித்தது. முதலில், சில வருடம் ஐரோப்பியரின் நிர்வாகத்திலிருந்த இந்த வங்கி பின்னர் முற்றிலும் இலங்கையர் மயமாகியது. இருபத்திரண்டு வருட காலத்துக்குள் இலங்கை வங்கி, பலவிதங்களிலும் வளர்ந்து, நாடெங்கும் கிளைகளை அமைத்து, யாரும் பெருமைப்படத்தக்க வகையில் பணி செய்து வந்துள்ளது பாராட்டத்தக்கதாகும்.

மக்களின் நம்பிக்கையையும் நன்றியையும் இலங்கை வங்கி எவ்வளவு தூரம் பெற்றுள்ளதென்பதற்கு, பெரிதும் வளர்ந்துள்ள அதன் வர்த்தகமே தக்க அத்தாட்சி. கொழும்பு புறக்கோட்டையிலே இவ்வங்கியின் புதிய கிளை ஸ்தாபனத்தை ஆரம்பித்து வைக்கையில், பல வர்த்தகர்களும் இலங்கை வங்கியின் சேவைகளையும், நிர்வாக அதிகாரியான திரு. லோகநாதனின் திறமையையும் வாயாரப் பாராட்டியுள்ளனர். வங்கி தேசியமயமான பின்பும், அனுபவமும் திறமையும் வாய்ந்த பல அதிகாரிகளின் மேலான சேவை இதற்குத் தொடர்ந்து கிடைக்க வேண்டியது அவசியமாகும்.

வங்கி ஆரம்ப முதல் இதன் நிர்வாக சபையிலிருந்துவரும் திரு. எச். வி. பெரேரா, மேற்குறித்த ஆரம்ப விழாவில் பேசுகையில், எதிர்காலத்திலே இலங்கை வங்கி, தேசிய அபிவிருத்தியில் பெரும் பங்கு பற்றி, பொது மக்களின் நல்வாழ்வுக்குப் பெரிதும் உதவுமென்றும் மக்களின் ஆதரவையும், அபிமானத்தையும் அமோகமாகப் பெறுமென்றும் நம்புவதாகச் சொன்னார். இந்த நம்பிக்கை நிறைவேற, இவ்வங்கியின் சேவை இனிப் பல விதங்களிலும் மேலும் பெருக வேண்டும். சிறு கைத்தொழில்கள், விவசாயம் முதலிய அபிவிருத்திக்கு மூலதனம் மிகவும் தேவை. இனிச் சற்றே அதிக தாராளமான முறையில் சிறு கைத்தொழில்களுக்கு கடனுதவி அளிக்க வேண்டுமென்றும் வங்கியின் நிலைமை மிகவும் பலமாகியுள்ளதாயும், பிரபல வர்த்தகரொருவர் கூறியுள்ள யோசனையை வங்கியின் நிர்வாகிகள் கவனித்து, ஆவன செய்ய வேண்டும்.

இந்தியாவிலே இம்பீரியல் வங்கியை அரசாங்கம் வாங்கி 'ஸ்டேட் பாங்காக' தேசியமயமாக்கியுள்ளது. என்றாலும் நாட்டில் பல பல வங்கிகளும் இருந்து, ஆங்காங்கே மக்களின் வர்த்தகம், கைத்தொழில் முதலிய தேவைகளுக்கு உதவி வருகின்றன. அவ்வித வாய்ப்பு இலங்கையில் மிகக் குறைவு. மிக அதிகமான வட்டிக்கே வர்த்தகரும் கைத்தொழிலாளரும் கடன் பெற வேண்டியுள்ளது. இதையெல்லாம் கவனித்து, இலங்கை வங்கி, மக்களுக்கும் நாட்டுக்கும் தனது சேவையை முன்னிலும் அதிகமாக விரிவாக்கிச் செய்ய வேண்டியது அதன் பெரிய பொறுப்பு. இதை அவ்வங்கி நிறைவேற்றி, பொது மக்களின் அமோகமான நன்றியையும் அபிமானத்தையும் பெறும் வகையில் அரசாங்கம் தக்க ஏற்பாடு செய்யுமென்றே நம்புவோம்.

# பிரிட்டனும் ஐரோப்பிய பொது மார்க்கெட்டும்

**ஐரோப்பிய பொது மார்க்கெட்டில் பிரிட்டனும் சேர்ந்து கொள்வதெனச் செய்துள்ள முடிவு இந்தியா, இலங்கை போன்ற காமன்வெல்த் நாடுகளுக்கு கவலையூட்டுவது இயல்பே. பிரிட்டன் இந்த மார்க்கெட்டில் சேருவதால் காமன்வெல்த் நாடுகளின் வெளிநாட்டு வர்த்தகம் நன்கு பாதிக்கப்படும்.**

ஐரோப்பாவில் உள்ள ஆறு நாடுகள் பொது மார்க்கெட்டு ஒன்றை ஏற்படுத்திக்கொண்டு விட்டிருக்கின்றன. அவ்விதம் பொது மார்க்கெட்டை ஏற்படுத்திக் கொண்டு விட்டுள்ள நாடுகள் பின்வருமாறு:

1. மே. ஜெர்மனி
2. பிரான்ஸ்
3. இத்தாலி
4. பெல்ஜியம்
5. ஹாலண்டு
6. லக்சம்பர்க்

இந்த ஆறு நாடுகளின் பொதுமார்க்கெட் ஏற்பாட்டையே ஆங்கிலத்தில் சுருக்கமாக ஈ.ஈ.சி.(E.E.C) அதாவது European Economic Community எனக் கூறுவது. அந்தப் பொது மார்க்கெட்டு ஏற்பாட்டை செய்து கொண்டுள்ள ஆறு நாடுகளும் வர்த்தகத் துறையில் பெரும் பயனும் முன்னேற்றமும் எய்தியுள்ளன. ஆகையால் அந்நாடுகளோடு பிரிட்டனும் அந்தப் பொதுமார்க்கெட்டு ஏற்பாட்டில் சேர முடிவு செய்துள்ளது. பிரிட்டனின் பொருளாதார நிலை இப்போது அவ்வளவு சிறப்பானதாக இல்லை. ஆகையால் அது பொதுமார்க்கெட்டு நாடுகளோடு தானும் சேர்ந்து தன் நிலையை மேம்படுத்திக்கொள்ள விரும்புவது இயல்பேயாகும்.

ஆனால் இதில் ஒரு பெரிய சங்கடம் இருக்கிறது. பிரிட்டனின் தலைமையில் காமன்வெல்த் நாடுகள் பல உள்ளன. அந்நாடுகள் பிரிட்டனோடு வர்த்தகம் நடத்தும்போது காமன்வெல்த் நாடு என்ற முறையில் கட்டணம் எதுவும் செலுத்த வேண்டியதில்லை. பிரிட்டன் இந் நாடுகளின் பொது மார்க்கெட்டுத் திட்டத்தில் தன்னையும் இணைத்துக்கொண்டுவிட்டால் பிரிட்டனில் காமன்வெல்த் நாடுகள் கட்டணமின்றி தங்கள் பொருள்களை இறக்குமதி செய்தல் முடியாது. பொது மார்க்கெட்டு விதிக்கும் கட்டண விகிதத்தைச் செலுத்திய பிறகே இறக்குமதி செய்தல் முடியும். இதனால் பிரிட்டனோடு உள்ள வர்த்தகம் வெகுவாகப் பாதிக்கப்படலாம் என இந்தியா போன்ற காமன்வெல்த் நாடுகள் அச்சம் தெரிவிக்கின்றன.

இதைப் பிரிட்டனும் உணராமல் இல்லை. இதனால் காமன்வெல்த் நாடுகளில் சுற்றுப்பிரயாணம் செய்து அந்நாடுகளின் கருத்தையும் ஆட்சேபங்களையும் நேரில் அறிந்து வரும்படி தன் மந்திரிகள் பலரை அந்நாடுகளுக்கு அனுப்பிவைத்திருந்தது பிரிட்டன். தார்னிகிராட்ட் என்னும் பிரிட்டிஷ் மந்திரி இது சம்பந்தமாக இலங்கைக்கும் வந்திருந்தார்.

பிரிட்டன் ஐரோப்பிய பொது மார்க்கெட்டில் சேருமேயானால் முக்கியமாக தேயிலை, துணி ஆகிய இந்தியாவின் ஏற்றுமதிகள் வெகுவாகப் பாதிக்கப்படலாம். வருடாவருடம் சுமார் 16 1/2 கோடி பெறுமதியுள்ள இந்திய ஜவுளிகள் வரிவிதிப்புக்களின்றி பிரிட்டனில் இறக்குமதி செய்யப்பட்டு இப்பொழுது விற்பனையாகி வருகின்றன. ஆனால் வருடம் 17.5 கோடி கெஜத்துக்குமேல் இந்திய ஜவுளிகள் பிரிட்டனில் இறக்குமதியாகக் கூடாது என்ற ஒருகட்டுப்பாடு உண்டு. இவ்விதக் கட்டுப்பாடு இருந்தபோதிலும் வரிவிதிப்பின்றி இறக்குமதி செய்யும் சலுகை பெற்றிருந்ததால் இந்தியா அதன் மூலம் பெரும் பயன் பெற்றே வந்தது என்றே கூற வேண்டும்.

வருடம் சுமார் 75 கோடி ரூபாய் பெறுமதியுள்ள தேயிலையை வரிவிதிப்பின்றி இப்பொழுது பிரிட்டனில் இறக்குமதி செய்து இந்தியா விற்பனை செய்து வருகிறது.

ஐரோப்பிய பொதுமார்க்கெட்டில் பிரிட்டன் சேர முடிவு செய்திருப்பதால் ஐரோப்பிய நாடுகளோடு இனி அதிகமாக அது பந்தப்பட்டு நிற்க வேண்டியதொரு நிலை தோன்றலாம். இதனால் காமன்வெல்த் உறவு என்பது இரண்டாவது ஸ்தானத்துக்குத் தள்ளப்பட்டு படிப்படியாக அந்த உறவு தேய்ந்து மறைந்துவிடவும் கூடும் என பல பிரிட்டிஷ் அறிஞர்கள் அச்சம் தெரிவித்தனர்.

ஆகையால் ஐரோப்பிய பொது மார்க்கெட்டில் பிரிட்டன் சேர்வது பல சிக்கலான விளைவுகளைத் தோற்றுவிக்க வல்லதென்றால் அதுமிகையாகாது.

# விவசாயத் துறையில் புரட்சி

## 'ஸ்விச்' போட்டால் ஏர் உழும்

மூனிச், ஜூலை 31

ஜெர்மன் விவசாயத்துறையில் தொழிலாளர்கள் எண்ணிக்கை மிகவும் குறைந்து வருவது காரணமாக இயந்திர சாதனங்களைக் கொண்டு விவசாயத்தை நடத்தும் முறையில் மேற்கு ஜெர்மனி அதிகக்கவனம் செலுத்திவருகிறது. ஒரு மேற்கு ஜெர்மன் கம்பெனி "கண்ட்ரோல்" அறையில் "ஸ்விச்" போட்டால் வயலில் உழும் ஒரு இயந்திரக் கலப்பையை உருவாக்கியுள்ளது. இந்த ஏர் பெரும் அளவில் உபயோகிக்கப்படும்போது ஏர்களில் கட்டி உழ குதிரைகளின் தயவை எதிர் நோக்கும் அவசியம் இராது.

சமீபத்தில் இந்த இயந்திர ஏர் உபயோகித்துக் காட்டப்பட்டது. ஆழமாகவும் நீண்டவாக்கிலும் மிக நேர்த்தியாக இது நிலத்தை உழுகிறது. வயலின் ஓரமாக ஒருவர் சாய்ந்த நாற்காலியில் படுத்துக்கொண்டே "ஸ்விச்"சை முடுக்கிவிட்டு இதை இயங்கச் செய்யமுடியும். ஏரை மேலாகவோ அல்லது ஆழமாகவோ, திருப்பவோ நிறுத்தவோ எது வேண்டுமானாலும் பொத்தான்களை அழுத்துவதுமூலம் செய்ய முடியும்.

எல்லாப் பண்ணைகளிலும் இந்த ஏர் உபயோகத்திற்கு வர இன்னும் சில காலமாகும். இந்த சாதனத்தின் விலை அதிகமானதும் கூட. அவ்வளவு விலை கொடுத்து இதை வாங்கி உபயோகிப்பது இப்போது லாபகரமாக இராது. எதிர்காலத்தில் இதன் முக்கியத்துவம் மிக அதிகமாக உணரப்படும். டெலிவிஷன் சாதனத்தை இத்துடன் இணைப்பதன் மூலம் கண்ணுக்கெட்டாத தூரத்திலும் கூட இந்த ஏரை உபயோகப்படுத்த முடியும்.

ஏருக்கு முன்னால் ஏதாவது தடுக்கினால் கூட அதை தடுக்கப் புது சாதனம் ஒன்று இயந்திர ஏர் முன்பு அமைக்கப்பட்டுள்ளது. சீக்கிரமாக உழுகிறது என்பதுடன் உடல் உழைப்பும் மிஞ்சுகிறது. விவசாயத்துறையில் இயந்திர சாதனங்களும் தானே இயங்கும் கருவிகளும் உபயோகிக்கப்படும் காலம் வெகு தூரத்திலில்லை.

## பொலனறுவை விக்கிரகங்கள்

### கீரிமலையில் பிரதிஷ்டை செய்ய கோரிக்கை

சரவணை, செவ்.

சமீபத்தில் பொலனறுவையில் கண்டெடுக்கப்பட்ட இந்து விக்கிரகங்களை கீரிமலையிலுள்ள சிவன்கோவிலில் பிரதிஷ்டை செய்ய வேண்டுமென கலாசார விவகார மந்திரியைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானமொன்றை சரவணை சேவா மன்ற நிர்வாக சபை நிறைவேற்றியுள்ளது.

## ஐயாறன் எழுதுவது

யாழ்ப்பாண வர்த்தக அன்பர் ஒருவர் நேரில் சில விஷயங்களை எனக்குக் காட்ட வேண்டுமென்று கூறி அன்புடன் அழைத்தார். சென்றேன்.

அது காலை வேளை. தெருவழியாக ஒரு கைவண்டியிலே மாட்டிறைச்சியை ஏற்றி இரத்தம் சொட்டச் சொட்ட பலரும் பார்க்கத் தக்கவிதமாக இழுத்துச் சென்ற கண்றாவியைக் காணச் சகிக்கவில்லை. இந்தக் காட்சி அருவருப்பாக இருப்பதுடனல்லாமல், மக்களின் சுகாதாரத்துக்கும் கெடுதலாகும். நாகரிக நாடுகளிலே, மூடி போட்ட வண்டியிலேயே இறைச்சியை எடுத்துச் செலுகின்றார்கள். அதே முறையை இங்கும் நாம் பின்பற்றுவது கஷ்டமல்ல.

* * *

தெருச்சாக்கடைக் குப்பைகளை அள்ளி வீட்டுக்கு முன்பாகப் போட்டுள்ளதையும், சில தேனீர்க் கடைகள் சுகாதாரமற்ற முறையில் நடப்பதையும், தெருவின் அழகைக் கெடுக்கும்படி நடக்கும் காரியங்களையும் அவர் உணர்ச்சி ததும்பக் கூறி, இதைப்பற்றி எல்லாம் உங்கள் பேனா எழுத வேண்டுமென்று கேட்டார்.

ஒவ்வொரு வட்டாரத்தையும் சேர்ந்த மெம்பர்கள், அன்றாடம் பல தெருக்களையும் சுற்றிப்பார்த்து, மக்கள் குறைகளைக் கேட்டு அவற்றை கூடுமானவரை நீக்க வேண்டியது அவர்களது கடமையாகும்.

இவ்விஷயமாக ஆங்காங்கேயுள்ள தேவைகளையும் குறைகளையும் எழுதினால் அவற்றைப் பிரசுரித்து தொண்டு செய்ய 'ஈழநாடு' காத்திருக்கின்றது. நகரின் சுகாதாரத்தையும் அழகையும் காத்து வளர்க்க வேண்டியது நகரில் வாழும் ஒவ்வொருவரின் பொறுப்பு. இதில்கட்சி, கோஷ்டி என்ற வேற்றுமைகளுக்கு இடமில்லை.

* * *

நேற்றுக் காலையில் ஒரு பத்திரிகைக்கார அன்பர் வந்தார். அவர் ஒரு பறங்கியர். வயது 74. இலங்கையிலும் இந்தியாவிலும் பல பல ஆங்கிலப் பத்திரிகைகளிலும் தொண்டாற்றியந்ததற்கான அத்தாட்சிப் பத்திரங்களைக் காட்டி, தமக்கு உடல் நிலை சரியில்லாததால், யாழ்ப்பாணத்தில் சில காலமாக இருப்பதாயும், ஜீவனத்துக்கு நாளொன்றுக்கு ஒரு ரூபாய் கிடைத்தால் போதுமென்றும் கூறினார். பல வருட காலம் பத்திரிகைத் தொண்டில் ஈடுபட்ட ஒருவர், வயோதிபத்தில் இப்படி ஜீவனத்துக்கும் தவிக்க நேரிட்டதைக் காண வேதனையாக இருந்தது. நல்லவேளையாக அவர் விவாகம் செய்யவில்லை.

இலங்கையில் பத்திரிகை ஆசிரியராகப் பல்லாண்டுகளிருந்த திரு. ஹ - லு கலே சென்ற ஞாயிற்றுக்கிழமை 'டைம்ஸ்' நிருபருக்குப் பத்திரிகைத் தொழில் பற்றி ஒரு ருசிகரமான பேட்டியளித்திருந்தார். பத்திரிகாசிரியர் வேலை மிகவும் சங்கடமானதென்றும் அவர்களுக்குச் சுவர்க்கத்திலே தனி இடம் ஒதுக்கப்பட்டிருக்குமென்றும் கூறியுள்ளார்!

சுவர்க்கத்தைப்பற்றி பத்திரிகைக்காரர்களுக்கு அதிக கவலையில்லை. இங்கு வாழ்க்கைப் போராட்டத்தைநடத்தபோதிய வசதிகள் தேவையென்பதே அவர்கள் கோரிக்கை.

பத்திரிகைச் சட்டம் வரப்போகிறது, வரப்போகிறது, என்று அடிக்கடி கூறும் பிரதமர், பத்திரிகைக்காரர்களுக்கு தக்க பாதுகாப்புகளை அளிப்பாரா? என்பது தெரியவில்லை. மனத்திருப்தியற்ற பேனாக்காரர், சமூகத்

(8-ம் பக்கம் பார்க்க)

# சம்பளத்திலிருந்து 4 வீத வரி

## அறவிட அரசாங்கம் நடவடிக்கை

கொழும்பு, செவ்வாய்

வரவு செலவுத் திட்டத்தினத்தன்று அரசாங்கத்தினால் கொண்டுவரப்பட்ட மசோதா சபையின் அனுமதிபெற்று நிறைவேறியதும், தேசிய அபிவிருத்திக்கான 4 சதவிகித வரி, மாதச் சம்பளகாரரிடமிருந்து ஒவ்வொரு மாதமும் கழிக்கப்படும். கிழமைச் சம்பளகாரரிடமிருந்து கிழமை தோறும் மேற்படி வரி அறவிடப்படும். ஆகஸ்ட் அல்லது செப்டம்பர் மாதத்திலிருந்து 4 சதவிகித வரி அறவிடப்படும் என்று திறைசேரிவட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

---

## விதவைக்கு 1 மாதச்சம்பளம்

கொழும்பு, செவ்வாய்

ஜூலை மாதம் 13ம் திகதி, புகையிரத நிலையத்தில் ரயில் விபத்துக்குள்ளாகி மரணமான அளுத்கமை ஸ்டேஷன் மாஸ்டர் பி. எம். எம். பர்னாண்டோவின் மனைவிக்கு ஒரு மாதச் சம்பளம் கொடுக்க புகையிரதப் பகுதி தீர்மானித்திருக்கிறது.

---

## கோவாவில் 10 பேர் கைது

பம்பாய், ஆகஸ்ட் 1

கோவாவில் ஒரு பொலிஸ் நிலையம் தாக்கப்பட்டதைத் தொடர்ந்து, 10 தேசியவாதிகளைக் கைது செய்திருக்கிறார்கள்.

---

## கலைஞர்களுக்கு குடியேற்றத்திட்டம்

கொழும்பு, செவ்வாய்

கண்டியின் சுதேசகலை, கைத்தொழில் நிபுணர்களுக்கு உதவும் ஒரு திட்டத்தை கைத்தொழில் மந்திரி அமுல்நடத்தவிருக்கிறார். குண்டசாலையில் ஒருபகுதி நிலத்தை எடுத்து 72 கலைஞர்களுக்குப் பிரித்துக் கொடுப்பதென்றும், அவர்களுக்கு வீடுகட்ட பணஉதவி செய்வதென்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. மரவேலைப்பாடுகள், தந்த வேலைப்பாடுகள், பித்தளை, பிரம்பு, மட்பாண்டம் முதலியவற்றில் தேர்ந்த கலைஞர்கள் ஆகியோர் இந் நிலங்களில்குடியேற்றப்படுவர்.

---

## மே. பாகிஸ்தானில் கடும் மழை

கராச்சி, ஆக 1

மேற்கு பாகிஸ்தானில் கடும் மழை பெய்ததால் தந்தித் தொடர்புகள் துண்டிக்கப்பட்டன. புகையிரதப் பாதைகள் நீரில் மூழ்கின. லாகூரில் 13 வீதிகள் நீரில் ஆழ்ந்தன. இன்று ராவல்பிண்டிக்குச் செல்லவிருந்த ஜனாதிபதி அயூப்கான் தனது விஜயத்தை ரத்துச் செய்துவிட்டார்.

## ஆசிரியர்கள் பெறும் அதிகலீவு மாணவர்கள் தோல்விக்கு காரணம்

கொழும்பு, செவ்வாய்

மாணவர்கள் சித்தியடையாது விடுவதற்கு முக்கிய காரணம் பாடசாலையிலுள்ள 30 வீதமான ஆசிரியர்கள் அதிகமாக ஒவ்வொரு நாளும் பாடசாலைக்குச் செல்லாமலிருப்பதே. இதனால் மாணவர்கள் முறையாகக் கல்வி பயில முடியாத நிலையிலிருக்கின்றனர்.

கல்வி இலாகாவினால் எடுத்துக்கொள்ளப்பட்ட சர்வே மூலம் இது விஷயம் தெரியவந்துள்ளது. ஆசிரியர்களின் 'லீவு' சம்பந்தமாகக் கீழ்க்கண்ட விபரங்கள் தெரியவந்துள்ளன.

ஆசிரியர்கள் 4 மாதத்துக்குச் சிறிது மேலான கால சேவைக்கு ஒரு வருடச் சம்பளம் பெறுகிறார்கள். ஆசிரியைகளைப் பொறுத்தமட்டில் இவர்கள் இன்னும் குறைவாகவே பாடசாலைக்குச் செல்கிறார்கள்.

12 மாதங்களில், ஆசிரியர்கள் 3 மாத பாடசாலை விடுமுறை பெறுகிறார்கள். 72 நாட்கள் ஓய்வு நாட்களாகப் பெறுகிறார்கள் (சனிக்கிழமைகளும் ஞாயிற்றுக்கிழமைகளும்). பிரசவ லீவுகளைத் தவிர்த்து, 21 நாள் காஷுவல் லீவும், 30 நாள் சுகவீன லீவுமாக 215 நாட்கள் இவர்கள் ஓய்வு பெறுகிறார்கள். மிகுதி 5 மாதங்களில் 14 நாட்கள் அரசாங்க விடுமுறை நாட்களாகப் பெறுகின்றார்கள். இத்துடன் 5 சமய விடுமுறைகளும் பெறுகிறார்கள்.

ஒரு நேரப் பாடசாலையில் பயிற்றும் ஆசிரியர்கள் ஒரு நாளில் 4 மணி நேரமே வேலை செய்கின்றனர். இரண்டு நேரப் பாடசாலையில் பயிற்றும் ஆசிரியர்கள் 5 மணி நேரமே வேலை செய்கின்றனர்.

வருடமொன்றுக்கு அரசாங்கம் ஒரு மாணவனுக்கு 109 ரூபா கல்வி பயிற்றுவிப்பதற்காகச் செலவிடுகிறது. இந்த ரீதியில் அரசாங்கத்தால் நடத்தப்படும் 8,400 பாடசாலைகளிலுமுள்ள மாணவர்களுக்காக ரூ. 90 லட்சம் நஷ்டமடைகிறது. இதுவரை அரசாங்கம் ரூ. 9 கோடி இவ்விதம் நஷ்டமடைந்துள்ளது.

# டாக்டர் ராஜன்பாபு இல்லம் திரும்பினார்

## குணமடைந்துவிட்டதாய் வைத்தியர்கள் அறிவிப்பு

புதுடில்லி, ஆகஸ்ட் 1

ஜனாதிபதி ராஜேந்திரப் பிரசாத் 12 நாள் தனிப்பட்ட வைத்திய விடுதியில் சிகிச்சை பெற்றபின், இன்று பிற்பகல் ராஷ்டிரபதி பவனம் திரும்பினார். இன்று காலை "எக்ஸரே" சோதனை நடத்திய பின் ஜனாதிபதி தமது விடுதிக்குச் செல்ல வைத்திய நிபுணர் குழு அனுமதித்தது. எக்ஸ்ரே சோதனையை ஜனாதிபதி நன்கு தாங்கிக் கொண்டார் என்றும், வயிற்றில் அவருக்கு ஹேர்னியா இருப்பதாகத் தெரியவில்லை என்றும் வைத்திய அறிக்கை தெரிவித்தது. சிறுகுடலில் அவருக்குப் புண் இருந்து, இப்போது ஆறிவருகிறது. புண்ணுக்குத் தொடர்ந்து சிகிச்சை அளிப்பதென முடிவு செய்யப்பட்டிருக்கிறது. ஜனாதிபதி குணமடைந்துவிட்டதால் அறிக்கை வெளிவராது.

ஜனாதிபதி ராஷ்டிரபதி பவனம் திரும்புவதாக அறிந்த மக்கள் ஏராளமானோர் வைத்திய விடுதியைச் சுற்றிக் கூடியிருந்தனர். உப ஜனாதிபதி டாக்டர் ராதாகிருஷ்ணன் முதலாவதாக விடுதிக்கு வந்து டாக்டர்களுக்கும் நர்ஸுகளுக்கும் நன்றி தெரிவித்தபின், ஆஸ்பத்திரி அதிகாரிகளும், சிப்பந்திகளும் அளித்த வாழ்த்துக்களை ராஜன்பாபு ஏற்றார்.

வழிநெடுக மக்கள் வாழ்த்துத் தெரிவித்தனர். ராஷ்டிரபதி பவன வாசலில் மெய்க்காப்பாளர்கள் ஜெயகோஷம் புரிந்து அவரை வரவேற்றனர். வீரர்கள் குழல் ஊதி வரவேற்றனர். மந்திர உச்சாடனத்துக்கிடையே குடும்பத்தினர் அவரை எதிர்கொண்டு அழைத்தனர்.

---

### துருக்கியில் உளவு பார்த்த ரஷ்யர்கள்

ஸ்தான்புல், ஆகஸ்ட் 1

உளவுபார்த்ததாக 15 வருட ஜெயில் தண்டனை அனுபவித்த பிறகு, தெற்கு துருக்கி சிறை ஒன்றிலிருந்து இரு ரஷ்ய ராணுவ அதிகாரிகள் விடுவிக்கப்பட்டுள்ளனர். இருவரும் கியிலிருந்து வெளியேற்றப்படுவார்கள்.

## சாமான்களைத் திருடிய பெண் பிடிபட்டார்

மட்டக்களப்பு, செவ்.

மட்டக்களப்பு அரசாங்க ஆஸ்பத்திரியில் கடமையாற்றும் பெண் கங்காணி ஒருவர் ஆஸ்பத்திரி சமையலறையிலுள்ள உபகரணங்களைத் திருடிச் சென்றபோது கண்டுபிடிக்கப்பட்டார்.

அவர்மீது இலாகா ரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

---

## விசேஷ தேசிய அபிவிருத்தி நிதி

கொழும்பு, செவ்.

நிதிமந்திரி திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா தமது வரவு செலவுத் திட்டப் பிரசங்கத்தில் அறிவித்த சிலவரிகள் மூலம் கிடைக்கும் பணத்தை ஒரு விசேஷ தேசிய அபிவிருத்தி நிதியில் சேர்ப்பதுபற்றி ஆராய்ந்து வருகிறார்.

இந்த நிதியில் சேர்க்கப்படும் பணம் தேசிய அபிவிருத்தித் திட்டங்களுக்கு மட்டும் உபயோகிக்கப்படும்.

---

# பாம்பா? வெள்ளமா?

## இரண்டிற்கும் தப்பினார் ஆசிரியர்

பெல்லாரி, ஆகஸ்ட் 1

பொங்கி வரும் பிரவாகத்தில் தத்தளித்துக் கொண்டிருந்த ஒருவர் நாகபாம்புடன் போராடிய பயங்கர சம்பவம் பற்றிய செய்தி கிடைத்துள்ளது.

ஒரு கிராமத்தில் உள்ள பள்ளியை வெள்ளம் சூழ்ந்து கொண்ட போது அப்பள்ளி தலைமை ஆசிரியர் தனது தலையில் கட்டு கட்டாக பாடசாலை தஸ்தாவேஜுகளைச் சுமந்து கொண்டு வெளியேறினார். அருகிலுள்ள வரதா நதியின் பிரவாகத்தை அவர் கடந்து தப்பமுயன்றார்.

அதே சமயத்தில்தனது புற்றில்தண்ணீர் புகுந்ததால்வெளியேறிய ஒரு நாகசர்ப்பமும் வெள்ளத்தில் நீந்தி வந்தது.

தலைமையாசிரியரின் கால்கள் உட்பட இடுப்பின் கீழ் உள்ள பாகம் தண்ணிருக்குள் இருந்தது.

இந்த நாக சர்ப்பம் அவரது கால்களை மெதுவாக சுற்றிக்கொண்டது. பின்பு படிப்படியாக ஊர்ந்து மேலே ஏறிச் சென்று அவரது தலையின் மேல் இருந்த தஸ்தாவேஜுகளில் புகுந்து கொண்டது.

தலைமை ஆசிரியர் பயத்தினால் விறைத்துப் போய்விட்டார். அவரது தலையின் மேல் பாம்பின் படம்! அவரது தேகத்தைச் சுற்றி நாகத்தின் உடல் கயிறு போல் சுற்றியிருந்தது!

அவர் எப்படியோ சமாளித்து பாம்பின் தலையை பிடித்து அதன் பிடியிலிருந்து தன்னை விடுத்துக் கொண்டார். அதை முழு பலத்துடன் தூக்கி எறிந்தார். பின்பு நதியை பத்திரமாக கடந்து கரையை அடைந்தார்.

---

# வர்த்தக கார்ப்பரேஷன் மசோதா வருகிறது

## யூகோ, போலந்திலிருந்து கப்பல்கள் வாங்கப்படும்

கொழும்பு, செவ்வாய்

வரவு செலவுத்திட்ட விவாதத்தின் பிறகு, முதலாவதாக வர்த்தக கார்ப்பரேஷன் மசோதாவை அரசாங்கம் பார்லிமெண்டில் கொண்டுவர இருக்கிறது. இதற்கிடையில் போலந்து, யூகோஸ்லேவியா ஆகிய நாடுகளிலிருந்து கப்பல்கள் வாங்குவதுபற்றி பேச்சுவார்த்தை நடத்த அதிகாரிகளைக் கொண்ட குழு ஒன்றை இலங்கை அரசாங்கம் அனுப்பி வைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

---

## இன்று ரேயின் 100-ம் ஆண்டு தினம்

புதுடில்லி, ஆகஸ்ட் 1

இந்தியாவின் தலைசிறந்த விஞ்ஞானிகளில் ஒருவரான ஆச்சார்யா ரேயின் 100-வது பிறந்ததினத்தை ஒட்டி நாளை விசேஷ 15 நயாபைசா முத்திரைகள் வெளியிடப்படும். அவரது உருவப்படம் இம் முத்திரைகளில் பொறிக்கப்பட்டிருக்கும்.

---

## ஸ்தலஸ்தாபன

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சென்ற வாரம் ஸ்தல ஸ்தாபன சேவை சட்டத் திருத்த மசோதா சமர்ப்பிக்கப்பட்டதென்றும், இந்த மசோதாவின் படி ஸ்தலஸ்தாபன உத்தியோகஸ்தர்கள் எவரையும் மாற்றும்படி ஸ்தலஸ்தாபனத்துக்கு உத்தரவிடும் அதிகாரம் மந்திரிக்கு இருக்குமென்றும் மேயர் தெரிவித்தார். இதனால் ஸ்தலஸ்தாபனங்கள் மந்திரியின் கைப்பொம்மையாகிவிடும் என்றும் மேலும் அவர்கூறினார்.

## "திருச்சிக்கு பல்கலைக் கழகம் வேண்டும்"

### நகரசபை தீர்மானம்

திருச்சி, ஆக 1

தஞ்சாவூர் வெள்ள நிவாரணத்துக்கு திருச்சி நகரசபை 10,000 ரூபாய் அளித்திருக்கிறது.

திருச்சியில் பல்கலைக்கழகம் ஒன்றை நிறுவுமாறு ராஜ்ய அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்ளும் ஒரு தீர்மானத்தையும் நகரசபை நிறைவேற்றியது.

---

## ரயில் வண்டி தடம் புரண்டது

சென்னை, ஆக 1

மதுரை–திருச்சி ரயில்பாதையில் சாமான் ரயில் ஒன்று தடம்புரண்டதால், ரயில் போக்குவரத்து பலமணிநேரம் தாமதமாயிற்று.

---

## அரபு லீக் காரியதரிசி

டூனிஸ், ஆகஸ்ட் 1

அரபு லீக்கின் தலைமைக் காரியதரிசி இன்று டூனிஸிலிருந்து கெய்ரோ சென்றார். டூனிஸிய ஜனாதிபதி போர்கிபாவுடன் பேச்சு நடத்தியதுபற்றியும் அவர் குறிப்பிட்டார். ஐக்கிய அராபியக் குடியரசுக்கும், டூனிஸியாவுக்குமிடையே மீண்டும் ராஜீய உறவு ஏற்படவிருக்கிறதென்றும் அவர் தெரிவித்தார்.

# வடிசாராயம் கைப்பற்றப்பட்டது

## உரும்பிராயில் திடீர் சோதனையின் விளைவு

மாவிட்டபுரம், புதன்

அச்சுவேலி கலால் நிலையத்தைச் சேர்ந்த இன்ஸ்பெக்டர் பிரான்சிஸ், சார்ஜண்ட் சதாசிவம் ஆகியோர் தலைமையில் சென்ற காலால் கோஷ்டி உரும்பிரபயைச் சேர்ந்த ஆர். தியாகலிங்கம் என்பவரின் வீட்டைப் பரிசோதனை செய்தபோது அங்கு சட்டவிரோதமாகத் தயாரிக்கப்பட்ட 9 போத்தல் வடிசாராயத்தையும், வடிசாராயம் உற்பத்தி செய்ய உபயோகிக்கப்படும் 300 போத்தல் 'கோடா'வையும் கைப்பறினர். அத்துடன் வடிசாரயம் செய்ய உபயோகிக்கப்படும் உபகரணங்களையும் கலால் பகுதியினர் கைப்பற்றினர்.

சுன்னாகம் பொலிசாரின் உதவியுடனேயே இக்கைப்பற்றுதல் நடைபெற்றது.

ஆர். தியாகலிங்கத்தை 1000 ரூபாய் பிணையில் விட்டு அறிவித்தல் கிடைக்கும் பொழுது கோட்டில் ஆஜராகும்படி பொலிசார் உத்தரவிட்டுள்ளனர்.

## பர்மிய ராஜாங்க மத மசோதா

### முஸ்லிம்கள் ஆட்சேபம்

ரங்கூன், ஆகஸ்ட் 1

ஆகஸ்ட் 11-ந் திகதி வெள்ளிக்கிழமையன்று "பிரார்த்தனை தினம்" அனுஷ்டிக்கும்படி பர்மிய முஸ்லிம்களை இஸ்லாமிய மதப் பிரசார கவுன்ஸில் கேட்டுச் கொண்டிருக்கிறது. புத்த மதத்தை பர்மிய ராஜாங்க மதமாக்குவதற்காக அரசாங்கம் மசோதா கொண்டுவர உத்தேசித்திருக்கிறது. இதை ஆட்சேபிக்கும் முறையில் பிரார்த்தனை தினம் அனுஷ்டிக்கும்படி இஸ்லாமிய கவுன்ஸில் கேட்டுக்கொண்டுள்ளது.

முஸ்லிம்களும், கிறிஸ்தவர்களில் ஒருபகுதியினரும் மசோதாவை எதிர்க்கிறார்கள்.

## பறிபோன பத்து ஓவியங்கள்

பிட்ஸ்பர்க், ஆக. 1

சர்வதேசப் புகழ்பெற்ற ஓவிய சேகரிப்பாளர் ஜி. டேவிட் தாம்ப்சனிடம் இருந்து 10 சிறந்த ஓவியங்கள் இன்று திருட்டு போய்விட்டன.

# $35\frac{1}{2}$ வருட கடுழிய சிறைத்தண்டனை

## வகுப்பு கலக வழக்கில் தீர்ப்பு

குருநாகல், திங்கள்

1958-ம் வருட வகுப்புக் கலக வழக்கொன்றில் மொத்தம் முப்பத்தைந்தரை வருடச் சிறைத் தண்டனை விதித்து குருநாகலை அசைஸ் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

1958-ம் வருடம் மே மாதம் 29-ந் திகதி வகுப்புக் கலகத்தின்போது மகாஇலுப்பள்ளம அரசினர் விவசாயப் பண்ணையைச் சேர்ந்த சொத்துக்களுக்குச் சேதம் விளைவித்ததாகவும் தீ வைத்ததாகவும், களவாடியதாகவும் சட்டவிரோதமாகக் கூடியதாகவும் மொத்தம் ஆறு குற்றச்சாட்டுக்கள்மீது எச். கே. பியதாசா, எச். எம். சர்னேலிஸ், டி. எம். ஜயசிங்கா, எச். எம். மட்டுமபண்டா, டி. எஸ். கொடிக்காரா, கே. எம். எச். களுவா, எம். எம். களுபண்டா, ஜே. ஏ. சிறிசேன, ஈ. ஹெட்டியாராச்சி, சி. எஸ். பிரேமதாசா, ஜி. எச். பி. குருநாடா, டொன் அரனேலிஸ், பி. செனிவிரத்தின, எச். எம். டிங்கிரிபண்டா ஆகிய பதினன்கு பேர்மீது தொடரப்பட்ட வழக்கு குருநாக்கலை அசைஸ் நீதிமன்றத்தில் அசைஸ் கமிஷனர் திரு. டி. ஈ. விஜயவர்த்தன முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

விசாரணை முடிவில் ஆறு குற்றச்சாட்டுகளிலும் எதிரிகள் குற்றவாளிகளென ஜூரிமார் ஏகமனதாகத் தீர்ப்பளித்தனர்.

எதிரிகள் ஒவ்வொருவருக்கும் முதல் குற்றச்சாட்டுக்கு ஏழு வருடக் கடுழியச் சிறைத் தண்டனையும் இரண்டாவது குற்றச்சாட்டுக்கு தலா ஆறு மாதக் கடுழியச் சிறையும் இதர நான்கு குற்றச்சாட்டுகளுக்கும் ஒவ்வொரு குற்றத்திற்கும் ஏழு வருடக் கடுழியச் சிறைத் தண்டனையும் விதித்து நீதியரசர் தீர்ப்பளித்தார். தண்டனைகள் யாவும் ஏககாலத்தில் அனுபவிக்க வேண்டும்.

நான்காவது எதிரி எச். எம். மட்டுமபண்டா ஆஸ்பத்திரியிலிருப்பதாக அறிவிக்கப்பட்டது. அவர்மீதுள்ள வழக்கு தனியாக விசாரணை செய்யப்படலாமென நீதியரசர் உத்தரவிட்டார்

திரு. டபிள்யூ. பி. சிற்றம்பலம் முதலாவது எதிரியின் சார்பிலும் 11-வது எதிரியின் சார்பிலும் ஆஜரானர். இதர எதிரிகளின் சார்பில் திரு. டி. வி. ஈ. சேனநாயக்காவின் அனுசரணையின்மீது ஜே. டி. ஆசீர்வாதம் ஆஜரானர். எல்லா எதிரிகளின் சார்பிலும் திரு. ஏ. பி. இரத்னயக்கா ஏற்படுத்தப்பட்டிருந்தார்.

---

## மட்டக்குளியில் சப்பாத்து தொழிற்சாலை

கொழும்பு, திங்கள்

தோல் உற்பத்திப் பொருள் கூட்டுறவு ஸ்தாபனத்தின் இரண்டாவது தோற்பொருள் உற்பத்தி தொழிற்சாலை ஒன்று நிறுவுவதற்குசெக்கோஸ்லாவாக்கியா கம்பெனிஒன்று அளித்த உதவியை இலங்கை அரசாங்கம் ஏற்றுக் கொண்டது.

தொழிற்சாலை கட்டுவதோடு மட்டும் நில்லாது. பந்திரசாதனங்களையும் கோவோ என்ற இக் கம்பனி அளிக்கிறது.

மட்டக்குளியில் மூன்று ஏக்கர் நிலத்திலே நிறுவப்படவிருக்கும் இத் தொழிற்சாலையின் முதற் பகுதி முடிவடைந்ததும் வருடம் ஒன்றுக்கு 1 லட்சத்து 70 ஆயிரம் சோடி சப்பாத்துக்களை உற்பத்தி செய்யும். இரண்டாவது பகுதியும் கட்டடம் பூர்த்தியாகிவிட்டால் இதைப்போன்று இருமடங்கு தொகையான சப்பாத்துக்களைத் தயார் செய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கைத்தொழில் இலாகா உத்தியோகஸ்தர்கள் சிலரை செக்கோஸ்லாவாக்கியாவுக்கு அனுப்பிசப்பாத்து தயாரிப்பிற் பயிற்சி அளிப்பதற்கு கைத்தொழில் இலாகா ஆலோசனை செய்கிறது.

---

## 'காஷ்மீர்' சேலைகள் இலங்கையில் தயாராகும்

கொழும்பு, செவ்வாய்

இலங்கையில் "காஷ்மீர்" சேலைகளையும் நார்ப்பட்டுச் சேலைகளையும் தயாரிப்பதற்கு ஒருஆலையைநிறுவுவது சம்பந்தமாக கைத்தொழில் அமைச்சு ஆலோசனை செய்து வருகிறது

'காஷ்மீர்' சேலைகளையும் நார்ப்பட்டுச் சேலைகளையும் உற்பத்தி செய்யும் ஆலையொன்றை இரத்மலானையில் நிறுவுவதற்கு தனிப்பட்ட வர்த்தகர் ஒருவர் அரசாங்கத்திடம் அங்கீகாரம் கோரியுள்ளார்.

இந்தச் சேலைகளைத் தயாரிப்பதற்கான மூலப் பொருள்கள் ஆரம்ப காலத்தில்தான் வெளி நாடுகளிலிருந்து இறக்குமதி செய்ய நேரிடுமென்று அவர் தெரிவுத்துள்ளார்.

இந்த ஆலை வருடத்துக்கு 60,000 சேலைகளை உற்பத்தி செய்யுமாம்.

---

வரவு-செலவுத் திட்டம்

## வாழ்க்கைச்செலவை குறைக்க வழிசெய்யவில்லை

மகாரகம, திங்கள்

"இவ்வாண்டின் இறுதியில் ரூபாயின் பெறுமதி 50 சதமளவு இறங்குமளவிற்கான நிலைமையை நிதிமந்திரி தமது வரவு செலவுத் திட்டத்தினல் ஏற்படுத்தியுள்ளார்."

இவ்வாறு அகலவத்தை எம். பி. திரு. அனில்முனசிங்கா மகாரகமவில் ஒரு பொதுக் கூட்டத்தில் பேசும் போது குறிப்பிட்டார். அவர் மேலும் கூறியதாவது: யு. என். பீ.யை விழுத்துவதற்கு லங்கா சமசமாஜக்கட்சி ஸ்ரீ லங்கா சுதந்திரககட்சி உதவி செய்தது. இன்றைய வரவு செலவுத் திட்டம் ஏழை மக்களை அதிகம் பாதித்துள்ளது. துறைமுகச் சிப்பந்திகளும், இ. போ. ச. சிப்பந்திகளுங்கூட வருமான வரி செலுத்த வேண்டியவர்களாகவிருக்கின்றனர். அரசாங்க எம்.பிக்கள் கூடப் பிரதமரைக் கண்டு நாட்டு மக்களது நிலைமைகள் பற்றிப் பேச்சுவார்த்தைகள் நடாத்த முடிவதில்லை. எனவே, பிரதம மந்திரிக்கே நாட்டு மக்களது நிலைமைகள் பற்றித் தெரியாது.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தனக்குள்ளே வெவ் வேறுபிரிவுகளைக் கொண்டுள்ளது. முன்னேற்றவாதிகள் எனச் சிலரும் புரட்சிவாதிகளெனச் சிலரும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியிலே இருக்கிறார்கள். இன்றைய வரவு செலவுத் திட்டம் வாழ்க்கைச் செலவைக் குறைப்பதற்கோ, வேலையில்லாப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கோ, நாட்டை விருத்தி செய்வதற்கோ எது வித வழியும் காட்டவில்லை.

---

## பெட்ரோல் நிரப்பும் நிலையங்கள்

### கார்ப்பரேஷன் எடுக்கும்?

கொழும்பு, செவ்வாய்

பெட்ரோல் கொள்வனவு செய்வதற்கான ஒழுங்குகள் யாவும் முடிவடைந்ததும் நாடு முழுவதிலுமுள்ள பெட்ரோல் நிரப்பும் நிலையங்களில் 175 நிலையங்களை பெட்ரோலியம் கூட்டு ஸ்தாபனம் எடுத்துக் கொள்ளுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

அரசாங்க இலாகாக்களும் அரசாங்க ஆதரவுள்ள கூட்டு ஸ்தாபனங்களுக்கும் எண்ணை விநியோகிப்பதற்கு இந்தப் பெட்ரோல் நிரப்பும் நிலையங்கள் தேவைப் படுமென்று கூட்டுஸ்தாபன அதிகாரியொருவர் தெரிவித்தார்.

எண்ணைத் தாங்கிகளுள்ள மோட்டார் வாகனங்களை வாங்குவதற்கும் கூட்டுஸ்தாபனம் வருவதாகத்ஆலோசனைசெய்து தெரிகிறது.

---

## பச்சை இல்லம் வெற்றி

வேலணை, திங்கள்

வேலணை அரசினர் மத்திய கல்லூரி வருடாந்த வலைப்பந்தாட்டப் போட்டிகள் நடைபெற்று முடிந்தன. பச்சை இல்லம் முதலாம் இடத்தையும் சிவப்பு இல்லம் இரண்டாம் இடத்தையும் நீல இல்லம் மூன்றாம் இடத்தையும் பெற்றன.

உதை பந்தாட்டப் போட்டியில் மேற்பிரிவில் பச்சை இல்லமும் கீழ்ப்பிரிவில் நீல இல்லமும் முதலிடத்தைப்பெற்றன

---

## விவசாயத் தொழில்விருத்தி நாட்டின் செல்வவளர்ச்சி

அவிசாவளை, திங்கள்

"இலங்கையின் விவசாயத் தொழில்கள் இன்று நல்ல நிலையில் இல்லை. நாடு செல்வவளம் பெற்றுச் சிறப்புறுவதற்கு நமது முக்கிய விவசாயத் தொழில்கள் மூன்றும் பேருதவி அளிப்பதாகும்."

இவ்வாறு தல்துவவில் நடைபெற்ற களனிப் பள்ளத்தாக்குத் தோட்ட முதலாளிகள் சங்கக் கூட்டத்தின்போது, சங்கத் தலைவர் திரு. ஆர். எல். புரகீர் தெரிவித்தார்.

தோட்ட முதலாளிக்ள் சங்கத் தலைவர் திரு. விக்டர் ரத்னயக்கா பேசும்போது, விவசாயக் கைத்தொழில்களே, நாட்டுக்குப் பெருமளவு செல்வத்தை அளிப்பதென்றும் இக் கைத்தொழில்களை அரசாங்கம் ஆதரிக்காவிட்டால், நாட்டின் பொருளாதாரம் குன்றுவதுடன் ஈற்றில் வாழ்க்கைச்செலவுகளையும் பெரிதும் பாதிக்கும் என்றார்.

திரு. ரத்னயக்க தொடர்ந்து பேசுகையில், தோட்ட முதலாளிமார் அரசாங்கத்துடன் சேர்ந்து ஒத்துழைப்பார்கள் எனப் பிரதமருக்கும், வர்த்தக மந்திரிக்கும் தெரிவிப்பதாகக் குறிப்பிட்டார். மேலும் வர்த்தக நிலையை அறிந்து அதற்கேற்ப நடவடிக்கைகள் எடுப்பதற்கு மத்தியகிழக்குக்கான ஒரு சபையை அரசாங்க அனுமதியுடன் விரைவில் நிறுவுவதாகவும் தெரிவித்தார்.

தேயிலைபற்றிக் குறிப்பிடும் போது, இலங்கைத்தேயிலை, மிகவும் விருத்தியடைந்துவருவதாகவும் தேயிலைப் பிரச்சாரச்சபை இத்துறையிற் பணியாற்றியுள்ளதாயும் அவர் தெரிவித்தார்.

எந்தநாடுகள், எமது தேயிலையை அதிகமாக வாங்குகிறதென்பதை அறிந்து அதற்குத் தக்கவாறு அரசாங்கம் நடந்தால் தேயிலை வாங்குவோரை நாம் இழக்கமாட்டோம் என அவர் மேலும் குறிப்பிட்டார்.

இலங்கைத் தேயிலையை மொறொக்கோ பெரிதும் விரும்புவதால், அங்கு நமது தேயிலை வியாபாரத்தை ஆரம்பிக்கலாம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

---

## "இளைஞர்களுக்கு கடவுள் நம்பிக்கை வேண்டும்"

ஊர்காவற்றுறை, திங்கள்

"கடவுள் நம்பிக்கை இளைஞரிடையே குறைந்து வரும் இக் காலத்தில் ஆலயங்களில் கூட்டுப்பிரார்த்தனை, சமயப் பிரசங்கம் நடைபெறுவது அவசியம்" "இளைஞர்கள் கடவுள் நம்பிக்கை அற்று நாஸ்திகப் பாதையில் செல்லாது அவர்களை நல்வழிப்படுத்தும் பொறுப்பு ஆசிரியர்களிலும் பெற்றோர்களிலும் பெரிதும் தங்கியுள்ளது" என்று சென்ற வெள்ளிக்கிழமை சரவணை ஸ்ரீகதிர்வேலாயுத சுவாமி கோவிலில் நடந்த சமயப்பிரசார கூட்டத்தில் திருநெல்வேலி சைவ ஆசிரிய பயிற்சிக்கலாசாலைத் தமிழ்ப் பேராசிரியர் திரு. நா. ஞானசம்பந்தன் "கடவுள் நம்பிக்கையும் வழிபாடும்" என்ற தலைப்பில் பேசுகையில் குறிப்பிட்டார்

---

## "தெய்வநெறிக் கழகத்தின் ஆத்மீகப்பணி"

காத்தான்குடி, திங்கள்

'தெய்வநெறிக்கழகம்' ஆத்மீகப்பணி புரிவதற்கான விரிவான திட்டம் வகுத்துள்ளது. யோகாசனப் பயிற்சி, கூட்டுப் பிரார்த்தனை, ஞாயிறு சமயப் பாடசாலை நடாத்துதல் என்பன முக்கிய குறிக்கோளாகும். பிரமச்சாரி ஓங்காரைதன்யர் இப்பணியில் பெரிதும் ஈடுபட்டுள்ளார். இதற்கான நிரந்தர ஆச்சிரமொன்று கோட்டைமுனை, ஸ்ரீமாரியம்மன் ஆலயத்தின் பக்கத்தில் கட்டப்பட்டு வருகிறது. இக் கட்டடத்துக்கான அடிக்கல்லை மட்டக்களப்பு மாவட்ட நீதிபதி திரு. எஸ். தம்பித்துரை சமீபத்தில் நட்டினர்.

---

## மாமாங்கேஸ்வரர் திருவிழா

காத்தான்குடி, திங்கள்

கிழக்கிலங்கையில் பழமையும், சரித்திரப் பிரசித்தி வாய்ந்ததுமான, அமிர்தகழி, மாமாங்கேஸ்வரர் கோயில் ஆண்டுத் திருவிழா இம்மாதம் 2ம் திகதி ஆரம்பமாகிறது. ஆடி அமவாசைத் தினத்தன்று தீர்த்தோற்சவம் நிகழும்.


10,000,000 மக்களும் விரும்பி வாங்குவன்!

இலங்கை முழுவதும் புகழ் பரப்புவன!

எவை?

ALUMINIUM INDUSTRIES (CEYLON) LTD. DOLLAR BRAND

டொலர் பவுன் அடையாளம் உள்ள

அலுமினியப் பாத்திரங்களே! ஏன்?

டொலர் அலுமினியம் மாற்று உயர்ந்து சுத்தம் உள்ளது!
டொலர் அலுமினியம் அழகு அமைப்பு கண்கவர்ச்சி உள்ளது!!
டொலர் அலுமினியம் உறுதி உழைப்பு உத்தரவாதம் உள்ளது!!!
எல்லாவற்றிற்கும் மேல்

உங்கள் தாய் பொன்னுட்டில் மாவிட்டபுரத்தில் நவீன முறையில் செய்யப்படுவது!

டொலர் பவுணை பார்த்து வாங்குங்கள் எங்கும் கிடைக்கும்

டொலர் மாத்திரமே உத்தரவாதமானது!

தயாரிக்குமிடம்:

அலுமினியம் இண்டஸ்ரீஸ் லிமிட்டெட்,

மாவிட்டபுரம். யாழ்ப்பாணம்.

FD. 3

## 'கூட்டுறவுச் சங்கங்களை ஸ்திரப்படுத்தவேண்டும்'

### —உதவி அமைச்சர்

மத்துகம, செவ்வாய்

"கூட்டுறவுச் சங்கங்களுள் 90 சத வீதம் ஸ்திரமில்லாதன வாகக் காணப்படுவதால் பல நோக்குக் கூட்டுறவுச் சங்க சமாஜம் இவற்றை ஸ்திரப்படுத்த வேண்டும்,"

இவ்வாறு ஸ்தலஸ்தாபன உதவி அமைச்சர் திரு. டயாரி. பஸ்கால் மத்துகமத்திலுள்ள ஆனந்த சாஸ்திராலயத்தில் நடைபெற்ற மேற்குப் பஸ்டுன் கோராளை பல நோக்குக் கூட்டுறவுச் சங்க வருடாந்தக் கூட்டத்தில் பேசும்போது குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது: "பல் நோக்குக் கூட்டுறவுக் பண்டகசாலைகள்" நிருவாகிகளின் சொந்த நலன்களுக்காக இருந்து வருகிறது என்பதற்குப் பல உதாரணங்கள் உள. இந்நிலை ஏற்படாது கூட்டுறவுச் சமாஜம் பார்த்துக் கொள்ளவேண்டும். நாட்டு வர்த்தகத்தில் கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபனத்திற்கு அதிக பங்களிப்பதென அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

எனவே, கூட்டுறவுச் சங்கங்கள் தமது கடமையைச் செய்வதற்குத் தயாராகுமென நான் நம்புகிறேன்."

## கொழும்பு நகரசபை இடைத்தேர்தல்

கொழும்பு, செவ்வாய்

கொழும்பு மாநகரசபையின் கறுவாக்காடு தொகுதிக்கான இடைத் தேர்தல் இம்மாதம் 12-ம் திகதி நடைபெறும் எனத் தெரியவருகிறது.

இத் தேர்தலில், ஐக்கிய தேசிய கட்சியின் அபேட்சகராக திரு. ஆர். பிரேமதாஸாவும், சுயேச்சையாக திரு. ஜேம்ஸ் டி' இரத்தினமும் போட்டியிடுவார்கள்.

## வானொலி நிகழ்ச்சிகள்

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

**புதன் 2-8-61**

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 காலைக்கதிர், 7-30 திரை இசை, 8-00 புல்லாங்குழல், 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 இளைஞர் மன்றம், 5-45 திரை இசை, 6-15 கிராமசஞ்சிகை, 6-45 வீணை.

இரவு 7-00 நேயர்விருப்பம், 7-30 ஆர். பொன்னுராஜா - வயலின், 8-00 இஸ்லாமிய நிகழ்ச்சி, 9-15 தேர்ந்தஇசை, 9-30 என். மாணிக்க இடைக்காடர் - பேச்சு, 9-45 வி. சிவராஜா - பாட்டு.

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15 பகல் 2, இரவு 7-15)

காலை 6-45 மங்கள இசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 வாத்திய இசை, 7-10 நிகழ்ச்சிக் குறிப்புகள், 7-30 சி. மதனகோபால் - வீணை.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 12-30 நடுத்தரப்பள்ளிகளுக்கு, 1-00 பெண்ணுலகம், 1-30 வாத்திய இசை, 1-50 மெல்லிசை, 2-10 உயர்தரப்பள்ளிகளுக்கு.

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடக சங்கீதம்), 5-45 இசைப் பயிற்சி, 6-15 கிராம நிகழ்ச்சிகள்.

இரவு 7-30 சென்னை அஞ்சல், 7-45 'பாலத்தூர் சோசியர்' - நாடகம், 8-00 சி. மதனகோபால் -வீணை, 8-30 திரைப் படஇசை, 9-15 நல்லுரை, 9-30 டெல்லி அஞ்சல்.

## புதிய வரி விகிதங்களுக்கு தொழிலாளர் சங்கங்கள் எதிர்ப்பு

கொழும்பு, திங்கள்

புதிய வரவுசெலவுத் திட்டத்தில் வரிகள் பல விதிக்கப்பட்டிருப்பது அரசாங்க சேவையாளர்களது சம்பளத்தைக் குறைத்திருப்பதற்குச் சமமாகும். பல வரிகளினுல் சம்பளம் பாதிக்கப்பட்டிருப்பதை அரசாங்கத் தொழிலாளர் சங்கங்களும் மற்றைய தொழிலாளர் சங்கங்களும் ஒன்று சேர்ந்து எதிர்ப்பதற்கு இதுவே தக்க தருணமாகும்.

இவ்வாறு இலங்கைப் போஸ்ட்மாஸ்டர்ஸ் யூனியன் தலைவர் திரு. வில்பிரெட் பெரேரா தலைமைத் தபால் காரியாலயக்கிளை, மத்திய தந்திக் காரியாலயக்கிளை ஆகியவற்றின் வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார். திரு. பெரேரா தொடர்ந்து கூறியதாவது:

உணவுப் பொருள்களின் விலை அதிகரித்திருப்பதால் தொழிலாளர் தமது வருவாயுடன் வீட்டுச் செலவுகளைச் சமாளிக்க முடியாதிருக்கின்றனர். சில அத்தியாவசியமான பொருள்களின் விலையை அரசாங்கம் உயர்த்தியிருப்பது மிகவும் நீதியற்ற செயலாகும். அரசாங்க சேவையாளர்கள் அரசாங்கத்திற்குச் சேவை செய்வதுடன் தமது சமூகத்துக்கும் சேவை செய்ய வேண்டியவர்களாகின்றுர்கள். எமது வருவாய் எவ்வளவிற்குக் கட்டுமோ அவ்வளவிற்குத் தியாகம் செய்ய நாம் தயாராக இருக்கிறேம், ஆனல் எமது அத்தியாவசிய தேவைகள் மீதும் கவனம் செலுத்தப்படாவிடின் நாம் எமது அதிருப்தியைக் காட்ட வேண்டியே இருக்கின்றது.

கீழ்வரும் பிரேரணைகள் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேறின.

அரசாங்க சேவையாளர்களது சம்பள உயர்வு, வாழ்க்கைச் செலவுப்படி, இளைப்பாறும் திட்டம், நியமனங்களும் வேலை உயர்வுகளும் பற்றி அரசாங்கம் கவலையீனமாகவும் பாராமுகமாகவும் இருப்பது பற்றி நாம் கொண்டுள்ள அதிருப்தியை இக்கூட்டம் வலியுறுத்துகின்றது. வரிகள் மூலமாகச் சம்பளத்தைக் குறைத்திருப்பதற்கும் நாம் அரசாங்கத்தைக் குற்றம் சாட்டுகிறேம்.

நூற்றுக்குநான்குசதவீதமாக அபிவிருத்தி வரி செலுத்தும்படி மாதம் 300 ரூபாய் சம்பளம் எடுப்பவர்களுக்கான நியதியை அரசாங்கம் மாற்ற வேண்டும் என அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறேம்.

அத்தோடு வாழ்க்கைச் செலவு குறைக்கப்பட வேண்டும் எனவும் அப்படியில்லாவிட்டால் மாதாந்தம் 500 ரூபாய்க்குக் குறைவான சம்பளம் எடுப்பவர்கள் யாவரது சம்பளமும் நூற்றுக்கு 20 வீதம் உயர்த்தப்படல் வேண்டும் எனவும் அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறேம்.

## அபராதம் ரூ. 50

கண்டி, செவ்வாய்

ஒரு றாத்தல் நெத்தலி மீனை கட்டுப்பாட்டு விலைக்கு அதிகமாக விற்றதற்காக கண்டி அல்விஸ் ஸ்டோர்ஸ் கடைக்காரர் எஸ். எ. சிறிசேன என்பவர் மீது கண்டி நீதிபதி திரு. பி. எஸ். டபிள்யூ. அபயவர்த்தன ரூ. 50 அபராதம் விதித்துள்ளார். அதுவுமல்லாமல் நீதிமன்றம் மீண்டும் கூடும்வரை இவருக்குச் சிறைத் தண்டனையும் விதித்துள்ளார்.

கண்டி உணவு விலைக்கட்டுப்பாட்டு பரிசோதகர்கள் ஜே. டி. வெராக், எம். ஒ. ஜவீர், ரி. வீரக்கோன், எம். எச். எம். ஜலால்டீன் ஆகியோர் பரிசோதனை நடத்துகையில் அவர் பிடிபட்டார். 'புராசிக்யூஷன்' சார்பில் உணவு விலைக் கட்டுப்பாட்டுப் பரிசோதகர் திரு. எஸ். ஏ. ஜினதாசா ஆஜரானர். சிறிசேனவின் சார்பில் திரு. வி. எம். குருசுவாமி ஏற்பட்டார்.


ஒரு கரண்டிபாலின் தரத்தை எந்தத் தேநீரும் மீறமுடியாது




இலங்கை தேநீரை அறியும்!

இலங்கை தேநீரை அறியும்! இது "மில்க்மெயிட்"டையும் அறியும்—இந்தச் சிறந்த பால் தேநீர் பருகுவதில் இன்பத்தையும் அதிகரிக்கும். உங்களுக்குச் சிறந்த—மிகவும் சுத்தமான பால் எனத்தெரிவு செய்யப்பட்டு நெஸில்ஸ் ஸ்தாபனத்தாரால் தயாரிக்கப்பட்டது. இது மிகவும் சிறந்த ரகமும் பணத்துக்கேற்ற நிறைந்த பெறுமதியும் கொண்டது. எப்பொழுதும் "மில்க்மெயிட்" பாலையே கேட்டுவாங்குங்கள்.

தேநீர் தயாரிப்பதற்கான ஐந்து பொன்னன விதிகள்:



- பக்கெட்டுகளில் அடைக்கப்பட்ட நிறமான தேயிலை
- உஷ்ண தேநீர்ப் பானை
- ஒருவருக்கு ஒரு கரண்டிப் பால், பானைக்கு ஒன்று
- சுத்தமாக கொதித்த வெந்நீர்
- 3-4 நிமிடங்களுக்கு ஊற விடுதல்.

ஆனல்! "மில்க்மெயிட்" பாலை எப்போதும் மறவாதீர்கள்.




"மில்க்மெயிட் பால்" — சிறந்த பால்

மகத்தான 4-வது வாரம்!

கிங்ஸ்லி பிளாஸா வெம்பிளி
(கொழும்பு) (வெள்ளவத்தை) (கண்டி)

நவா மொடர்ன் விஜிதா
(கொம்பனித்தெரு) (பதுளை) (மஸ்கேலியா)

ஜெமினி கணேசன், பத்மினி
கே. ஏ. தங்கவேலு, மனோரமா
எஸ். நடராஜன்

மற்றும் பலர் நடித்த



மதுரம் பிக்சர்ஸ்

மீண்ட சொர்கம்

கதை, வசனம், டைரக்ஷன்
ஸ்ரீதர்

பின்னணி: ஏ. எம். ராஜா, சீர்காழி கோவிந்தராஜன், ஜிக்கி, எம். எல். வசந்தகுமாரி

மக்கள் கண்குளிர, இதயம் மகிழ, கலையும், பண்பும் இணைக்கப்பட்ட அருமையான அமைப்பு

இப்பொழுது திரையிடப்படுகிறது!

வெலிங்டன் (யாழ்ப்பாணம்) தினசரி மாலை 6-30க்கும் இரவு 9-30மணிக்கும்

பி. சரோஜாதேவி, எஸ். எஸ். ராஜேந்திரன், தங்கவேலு நடித்த

மணப்பந்தல்

எல்லோரும் பார்த்து மகிழவேண்டிய ஓர் குடும்பச்சித்திரம்!

மனோஹரா (யாழ்ப்பாணம்) தினசரி மாலை 6-30, இரவு 9-30 மணிக்கும்
சனி, ஞாயிறு காலை 10, பி. ப. 2-30 மணிக்கும்.

சிவாஜி கணேசன் - பி. சரோஜாதேவி
நடித்த

பாகப்பிரிவினை

இப்பொழுது திரையிடப்படுகிறது!

ராணி சினிமா (யாழ்ப்பாணம்) பி. ப. 2 மணி, மாலை 6-00மணி 9-45 மணிக்கும்

புரட்சி நடிகர் எம். ஜீ. ஆர்.
கன்னடத்துப்பைங்கிளி சரோஜாதேவி
நடித்த

திருடாதே!

தென்னிந்தியாவிலும் மற்றும் பல இடங்களிலும் அதிவெற்றி வாகை சூடிக்கொண்டிருக்கும் மகோன்னத தயாரிப்பு!


# தடியால் அடித்துக் கொலை செய்தாராம்

## எதிரிக்கு ஆறு வருட சிறை

யாழ்ப்பாணம், புதன்

எட்டுப்பிள்ளைகளின் தாயாரைத் தடியால் அடித்துக் கொலை செய்ததாகக் குற்றஞ் சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் எதிரிக்கு நீதியரசர் டாக்டர் எச். டபிள்யூ. தம்பையா கியு. ஸி. ஆறுவருடக் கடுழியச் சிறைத் தண்டனை விதித்தார்.

1960ம் வருடம் ஒக்டோபர் மாதம் 15ந்திகதி தெல்லிப்பளையிலுள்ள பளை வீமன் காமம் என்னுமிடத்தில்மாணிககனின் மனைவி செல்லத்தைத் தடியால் அடித்துக் கொலை செய்ததாக சின்னவன் இராசன் என்பவர் மீது குற்றம்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு வடமாகாண அசைஸ் நீதிமன்றத்தில் நீதியரசர் டாக்டர் எச். டபிள்யு தம்பையா கியு. ஸி. முன்னிலையில் மீண்டும் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

முடிக்குரிய வழக்கறிஞர் திரு. பி. நகுலேஸ்வரன் பிராசிக்கியூஷன் தரப்பில் ஆஜரானர்.

திருவாளர்கள் வி. நடராஜா, எஸ். ஸி. கதிரவேலு ஆகியோரின் அனுசரணையுடன் திரு. ஸி. எஸ். பார் குமாரகுல சிங்கம் எதிரி தரப்பில் ஆஜரானர். எதிரியின் சார்பில் திரு. பி. பாலவடிவேலு ஏற்படுத்தப்பட்டிருந்தார்.

விசாரணை நடைபெற்றுக் கொண்டிருக்கையில், ஆத்திரத்தினல் கொலைசெய்யும் நோக்கமின்றி கைமோசக் கொலை புரிந்ததாக எதிரி ஒப்புக் கொண்டார்.

ஜூரிமார் இதை ஏற்றுக் கொண்டு எதிரி கொலை செய்யும் நோக்கமில்லாமல் கைமோசக் கொலை செய்ததாக அபிப்பிராயம் தெரிவித்தனர்.

தண்டனையில் கருணை காட்டும்படி திரு பார் குமாரகுல சிங்கம் கோரினர். எதிரிக்கு இப்பொழுது 25 வயதென்றும் ஒரு மனைவியும் நான்கு பிள்ளைகளும் இருக்கிருர்களென்றும் அவருக்கு கொலை நோக்கமே இருந்ததில்லையென்றும் அவருடைய ஒழுக்கத்தைப்பற்றிக் கூறுவதற்கு எதுவுமில்லையென்றும் திரு. பார் குமாரகுலசிங்கம் கூறினர்.

"காலஞ்சென்றவர் ஆத்திரமூட்டியிருக்கிருர். காலஞ்சென்றவரின் வளவுக்குள் கிடந்த தடியை எடுத்துஎதிரி அடித்திருக்கிருர். அது கத்தி தீட்டும் தடி" என்று வழக்கறிஞர் கூறினர்.

நீதியரசர், எதிரிக்கு ஆறு வருடக் கடுழியச் சிறைத்தண்டனை விதித்தார்.

## பாப்பரசரின் இராச்சிய மந்திரி காலமானர்

வத்திக்கான், ஜூலை 30

பரிசுத்த 23ம் அருளப்பபாப்பரசரின் இராச்சிய மந்திரியாகப் கடந்த 3 வருடகாலமாகப் பதவி வகித்த கருதினல் டொமினிக்கோ தார்டினி ஆண்டவர் மாரடைப்பினல் காலமானர். இறக்கும்போது இவருக்கு வயது 83. ஒரு நாட்டின் பிரதம மந்திரி, பாதுகாப்பு வெளிநாடு, உள்நாட்டமைச்சர்கள் வகிக்கக்கூடிய அத்தனை பொறுப்பையும், வத்திக்கான் இராச்சியத்தில் இவர் பொறுப்பேற்று நடாத்தி வந்தார். 1958ம் ஆண்டில் பாப்பு தேர்தல்நடைபெற்றபோது இவர் பாப்புவாகத் தெரிந்தெடுக்கப் படலாமெனக் கருதப்பட்டது.

# கண் பரிசோதனை செய்யும் கருவி திருடினர்

## 100 ரூபா தண்டம்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் பெரிய தெருவைச் சேர்ந்த எம். துரைராஜசிங்கம் என்பவருக்குச் சொந்தமான ரூ. 750 பெறுமதியுடைய கண் பார்வை பரிசோதனை செய்யும் கருவியைக் களவாடியதாக நல்லூரைச் சேர்ந்த டபிள்யு. அரியரத்தினம் என்பவர்மீது தொடரப்பட்ட வழக்கு, யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் திரு. அரசுவால்டன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. எம். வல்லிபுரம் வழக்கைத் தொடர்ந்திருந்தார். யாழ்ப்பாணப் பகுதியைச் சேர்ந்த கண் பரிசோதகர் திரு. எம். துரைராஜசிங்கம் விசாரணையின்போது கூறியதாவது:-

நான் 'சிட்டி டென்ரல் லபோரட்டரி' யின் சொந்தக்காரன். எதிரி எனக்குக்கீழ் 4 வருடங்களாக வேலை செய்துவந்தார். இவ்வருடம் ஜனவரி முதலாம் திகதி நான் மத்தியான போஜனம் சாப்பிடுவதற்காக எனது வீட்டுக்குச் சென்றிருந்தேன். 'லபோரட்டரி'யைப் பார்த்துக் கொள்ளுமாறு நான் என் மகளை அங்கு விட்டுச் சென்றிருந்தேன். அவள் என்னிடம் வந்து யாரோ என்னைத் தேடி வந்திருப்பதாக் கூறினள். நான் விரைவில் வருவதாக அவளிடம் கூறினேன். அப்பொழுது அவள் கண் பரிசோதனை செய்யும் கருவியை அரியம் களவாடிச் செல்வதாகக் கூறினர். நான் எனக்குச் சொந்தமான கருவியையே அவர் களவாடிச் சென்ருர் என்பதை அடையாளம் கண்டேன்.

எதிரி தாம் குற்றவாளியென ஒப்புக்கொண்டதன் பேரில் மாஜிஸ்திரேட் எதிரியை முடிக்குரிய செலவுப் பணமாக 100 ரூபாய் செலுத்துமாறும் இரண்டு வருட நன் நடத்தைப் பிணையில் செல்லுமாறும் விதித்து அவரது மனைவியை ரூ. 200 பிணைப்பணத்துக்காகப் பொறுப்பு நிற்கும்படி கட்டளையிட்டார். களவாடிய பொருளை உரியவரிடம் சேர்ப்பிக்குமாறும் மாஜிஸ்திரேட் எதிரியிடம் கட்டளையிட்டார்.

திரு. ஜிம்மி. ராஜரத்தினம் எதிரி தரப்பில் ஆஜரானர்.

## ஐயாறன்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

துக்கும் நாட்டுக்கும் ஆபத்தாவார்!

* * *

கே. பி. சுந்தராம்பாள், தாம் பாடும் பாட்டுக்களை "டேப் ரிக்கார்ட்" எடுக்கவோ, ரேடியோவில் அஞ்சல் செய்யவோ கண்டிப்பாக மறுத்துவிட்டதாக ஒரு கொழும்பு அன்பர் ஏமாற்றத்துடன் கூறி, அதனல்தான் அவரது கச்சேரியில் குழப்பம் ஏற்பட முருகன் செய்தானே என்று குறிப்பிட்டுள்ளார்.

* * *

கதிர்காமத்தில் சிங்களவருக்கு முருக பக்தி அதிகமாக இருப்பதைக் கண்டதாயும், அவர்களுக்குச் சிங்களத்திலே முருக அவதாரம், கந்தபுராணம் இவற்றை விளக்குவதுடன், காவடியின் மகிமை முதலியவற்றையும் எடுத்துச் சொன்னல், 'பைலா ஆட்டம்' குறைந்து, நல்ல பயன் ஏற்படலாமென்று மற்ருேர் அன்பர் எழுதுகின்ருர்.

* * *

கதிர்காமத் திருவிழாவில், கந்தரனுபூதி புத்தகத்தை இலவசமாக அச்சிட்டு வழங்கியதாக ஒரு யாழ்ப்பாண அன்பர் தெரிவித்து, இரு புத்தகங்களை அன்புடன் அனுப்பியுள்ளார். சிங்களத்தில் முருகனைப்பற்றிய சிறு நூல்களை வெளியிட்டு அங்கு சிங்களவருக்கு விநியோகிப்பது நல்ல கைங்கரியமாகும்.

# "பிரச்சினைகளைக் கண்டு மாணவர் தளர்ச்சியுறக் கூடாது"

—இந்தோனேஷிய ஸ்தானிகர்

கொழும்பு, செவ்வாய்

அகில இலங்கை இஸ்லாமிய வாலிபர் சங்கத்தின் பதினேராவது வருடாந்தக் கூட்டத்தில் இலங்கையில் உள்ள இந்தோனேஷிய ஸ்தானிகர் திரு. ஆசாபவாகி பேசுகையில் இலங்கையிலுள்ள வாலிபர் இந்நாட்டில் எழுந்துள்ள பிரச்சினைகளைக் கண்டு பயந்து விடக்கூடாதென்ருர்.

அவர் தொடர்ந்து பேசுகையில் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முயலும் பாதைகளில் ஏற்படும் முட்டுக்கட்டைகளால் தளர்ச்சி அடைய வேண்டாமென்றும் அவற்றைஅளவுமீறிக் கவனித்தால் வெற்றி எதுவும் கிட்டாதெனவும் அவர் தெரிவித்தார்.

மேலும் 20 ம் நூற்ருண்டில் ஆபிரிககா, ஈரான், இந்தோனேஷியா போன்ற பிரதேசங்களில் தழைத்தெழும் இஸ்லாமிய உலகத்தைக் கவனித்தால் சர்வதேச அரங்கில் தனி நிர்ணயத்துடன் விளங்க வாலிபர் சங்கங்களின் தீவிர முயற்சியும் தலைமை தாங்கும் திறனும் பெரிதும் உதவியிருக்கிறதென்பதை அறிவீர்கள் என்ருர்.

## யாழ்ப்பாணத்தில் இராணுவத்தினரின் இரவு விருந்து

யாழ்ப்பாணம், புதன்

இலங்கை இராணுவத்தைச் சேர்ந்த இராணுவத் தளபதியம் முதலாவது 'பட்டாலியன்' படையைச் சேர்ந்த உத்தியோகஸ்தர்களும் இராணுவ சிப்பாய்களும் சென்ற திங்கட்கிழமை இரவு 7-30 மணியளவில் இராணுவ முகாமில் 'காக்டெயில் பார்ட்டி' ஒன்றை நடத்தினர்கள்.

லெப்டினண்ட் கேர்ணல் உடுகம விருந்தினரை வரவேற்று, இராணுவத் தளபதி திரு. விஜயக்கோனுக்கு அறிமுகம் செய்து வைத்தார்.

நீதியரசர் டாக்டர் எச். டபிள்யூ. தம்பையா கியூ. ஸி. யும் அவரது பாரியாரும் டாக்டர் எஸ். சுப்பிரமணியம், இராசவாசல் முதலியார் ஸி. தியாகராஜா, யாழ்ப்பாண எம். பி. திரு. அல்பிரட் துரையப்பாவும் அவரது பாரியாரும், யாழ்ப்பாண மேயர் திரு. டி. துரைராஜா ஆகியோரும் வேறுபலரும் இவ்வைபவத்தில் கலந்து கொண்டனர்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதி, 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1961-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 2-ந்திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.